Regd No. 2514. Swadesamitran Illustrated Weekly

ஸ்ரீநாதன்:—நீங்கள் எழுதிய பாகவதத்தை அரசனுக்கு அர்ப்பணம் செய்வதால் லாபமுண்டு. இப்பொழுதுள்ள வறுமை நீங்கி, ஐச்வரிய லக்ஷ்மி வீட்டில் தாண்டவமாடுவாள்.

போதன :—ராம ராம. வேண்டும் வேண்டுமென்ற அளவிலாத ஆசையே வறுமை. உள்ளதைக் கொண்டு திருப்தியடைவோரையே திருவும் அடைவாள். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து. ஆகையால் பாகவதத்தை மனிதருக்கு அர்ப்பணம் செய்து நான் அடைய விரும்பும் ஐச்வரியமெதுவுமில்லே.

ஸ்ரீநாதன்:—ராஜகோபத்திற்குள்ளாவீர் !

போதன :—ஈச்வரானுக்கிரகமே எனக்குக் கவசம்.

கடவுள் பக்தியில் கல்லேயொத்த மனங்கொண்ட மகான் போதன. அவருடைய ஜீவிய சித்திரத்தைப் பாருங்கள்.

1943ஹு ஜனவரிமீ
7உ வியாழக்கிழமை
சென்னே
பாரகனில்
மகத்தான ஆரம்பம்..
ஆந்திர தேசத்திலுள்ள முக்கிய இடங்களிலும்
இதே தேதி ஆரம்பமாகிறது.

பக்த வாஹினியாரின்
போதன

நாகையா நடித்தது: டைரெக்ஷன்: கே.வி.ரெட்டி, B.Sc.Hons.

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Ma ra. Editor. C. R. Srinivasan. B.A.

சுதேசமித்திரன்

Vol. 13 No. 50 10-1-'43 **வாரப்பதிப்பு** Price 2 Annas.



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறுள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சென்றவார நிகழ்ச்சிகள்

★

சென்னை சர்க்கார் கோபம்

அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்கள் மகா நாட்டுடன் செய்துகொண்டஒப்பந்தத்திற்கு மாருக சில மாகாண சர்க்கார்கள் நடந்தன. மத்திய கவர்ன்மெண்டிடம் முறையிட்டும் பரிகாரம் கிடைக்கவில்லை. கவர்ன்மெண்டின் போக்கை கண்டிப்பதற் கறிகுறியாக இம்மாதம் 6-ந்தேதி யன்று இந்தியாவிலுள்ள பத்திரிகைகளையெல்லாம்1-நாள்வெளியிடாமல் நிறுத்தவேண்டுமென்று மகாநாட்டின் தலைவர் கேட்டுக்கொண்டார். தவிர, பம்பாய் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தை அனுசரித்துஇந்தியப் பத்திரிகைகள் சர்க்காரின் புது வருஷப் பட்ட ஜாபிதாவையும் வெளியிடவில்லை. இது கண்டு முதன் முதலாகச் சென்னை சர்க்காருக்கு கோபம். அப்படியா சங்கதி! இனி உங்கள் ரிப்போர்ட்டர்கள் எங்கள் ஆபீசுக்கு வரக்கூடாது. சர்க்கார் அறிக்கைகளைத் தரமாட்டோம். குண்டு விழுந்த பகுதிகளுக்குப் போய் பார்வையிடக் கொடுத்திருந்த அனுமதிச் சீட்டை ரத்துசெய்துவிட்டோம் என்று தாக்கீது விடுத்துவிட்டார்கள். இந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டதால் பத்திரிகைகளுக்குத் தான் ஏதோ நஷ்டம் ஏற்பட்டுவிட்டதாகச் சர்க்கார் கருதுகின்றனர் போலும்! பொதுமக்களுக்குச் சர்க்கார் தெரிவித்துவர வேண்டிய தகவல்களை அவ்வப்போது கால தாமதமின்றி அறிவித்து வரபத்திரிகைகள் உதவிகரமாயிருந்தன. நீங்களாக சில சமாசாரங்களை வெளியிட நிறுத்தி விட்டீர்கள். நாங்களாகவும் இன்னும் சில சமாசாரங்களை நிறுத்தி விடுகிறோம் என்கிறது சென்னை சர்க்கார். நஷ்டம் யாருக்கு? மூகத்தைப் பழிக்க மூக்கை அறுத்துக்கொண்ட கதையை ஞாபகப்படுத்துகிறது.

* * * *

யுத்தம் 1½ வருடந்தான்-மாளவ்யா ஜோஸ்யம்

பண்டித மதன்மோஹன் மாளவியாவின் 82-வது ஜனமதினக் கொண்டாட்டம் சம்பந்தமாக அகில இந்திய கோரட்சகப் பிரசார மண்டலத்தினர் அவருக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தனர். அதற்குப் பதிலளிக்கையில் தற்போதைய உலக யுத்தம் இன்னும் ஒன்றரை வருஷத்துக்கு நீடித்துப் பிறகு ஜனநாயக வெற்றியில் முடியும் என்று அவர் கூறினர்.

* * * *

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை

அல்லாமா மஷ்ரகி சென்னையிலிருந்து புதிய டில்லிக்கு போனர்.

ஸ்டேஷனில் அளிக்கப்பட்ட உப்சாரதத்துக்குப் பதிலளிககையில் அவர் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக உழைக்கும்படி. கக்ஸார்களைக் கேட்டுக் கொண்டார்.

எந்த ஒரு வகுப்பும் இன்னொரு வகுப்புடன் சண்டையிடுவதால் தனக்கோ அன்றி தேசத்துக்கோ சுதந்திரத்தைப் பெற முடியாதென்று அவர் கூறினர்.

கக்ஸார் ஸ்தாபனத்தின் பேரில் விதித்திருந்த தடையை நீக்கி விட்டதற்காக அவர் சர்க்காரைப் பாராட்டினர்.

* * * *

2,59,200 தீப்பெட்டிகள்

ஜில்லா மாஜிஸ்திரேட்டின் உத்தரவை மீறி ஆமதாபாத் ஜில்லாவுக்கு வெளியே 5 மாட்டு வண்டிகளில் ஏற்றி கொண்டு போகப்பட்ட சுமார் 6 000 ரூபாய் பெறுமான 1.800 க்ரோஸ் (2 லட்சத்து 59 ஆயிரத்து 200) தீப்பெட்டிகளைப் போலீஸார் கைப்பற்றினர்.

* * *

"ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகைக்கு உத்தரவு

மத்திய பத்திரிகை ஆலோசனை கமிட்டிக் கூட்டத்தை யொட்டி டில்லி பிரதம கமிஷனர் "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" ஆசிரியரான ஸ்ரீ தேவதாஸ் காந்திக்கும், பிரிண்டரும் பப்ளிஷருமான ஸ்ரீ தேவிப் பிரஸாத சர்மாவுக்கும், "ஹிந்துஸ்தான்" ஆசிரியரான ஸ்ரீ முக்தி பீஹாரி வர்மாவுக்கும் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார். கலவரங்கள் பற்றிய எல்லாச் செய்திகளையும் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னதாக உதவிப் பத்திரிகை ஆலோசகரின் கணிக்கைக்கு அனுபபவேண்டுமென்று மேற்படி உத்தரவு கூறுகிறது.

உத்தரவு உடனே அமுலுக்கு வருகிறது.

* * *

பர்மாவை பிடிப்பதன் செலவு இந்தியா தலையில்?

இந்தியாவின் எல்லைப் பிரதேசம் என்ற காரணத்தால், பர்மாவைக் கைப்பற்றுவதனல் ஏற்படும் பொருள் செலவை இந்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று லண்டனிலிருந்து தெரிவிக்கப்பட்டிருப்பதாக வியாபாரிகள் வட்டாரங்களில் தெரிய வருகிறது. இந்தியாவின் யுத்தச் செலவுக்காக லண்டன் அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்ட இத்திட்டம் வியாபாரிகளிடையே ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது. இவ்விஷயத்தில் இந்திய சர்க்கார் வெளியிடப் போகும் அறிக்கை மிக்க ஊக்கத்துடன் எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

ஹிந்து மகாசபை முடிவு

உலகில் இந்தியாவின் சுதந்திர பாத்தியதைக்கு அங்கீகாரம் பெறுவதற்கும், நாட்டின் ஒற்றுமையைக் காப்பதற்கும் "தீவிர நடவடிக்கை" எடுப்பது சம்பந்தமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியதற்குப் பிறகு அகில இந்திய ஹிந்து மகாசபை மகாநாடு சமீபத்தில் முடிவுற்றது.

தீர்மானத்தை டாக்டர் பி. எஸ் மூஞ்சே பிரேரித்தார். ராஜா மஹேஸ்வர தயாள ஸேத்தும், ஸ்ரீ பி. ஜி. கபார்தேயும் ஆதரித்தனர்.

மகாநாடு கலைவதற்கு முன் தலைவர் ஸ்ரீ ஸாவர்க்கார் சிறிது நேரம் பேசினர்.

மகாநாட்டின் முக்கியமான தீர்மானம் 31ந் தேதி நிறைவேறியது. இந்திய ஜாதியின் ஒற்றுமையைக் குலைக்கும் எந்த அரசியல் திட்டத்தையும் ஹிந்து மகாசபை ஆட்சேபிப்பதாகவும் க்ரிப்ஸ் திட்டப்படி இந்தியாவை துண்டாடலாமென நிருக்கும் தங்கள் கொள்கையை மாற்றும்படி பிரிட்டிஷ் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுவதாகவும் மேற்படி தீர்மானம் கூறியது.

வீர ஸவார்க்கரின் தலைமை பேச்சு வீராவேசமாயிருந்தது. ஹிந்து மகா சபையைச் சேர்ந்த தீவிர வாதிகளது மனோ நிலைமையை அவர் எடுத்து காட்டியிருக்கிறார்; இந்தியா பிளவு படாமல் ஒரே நாடாக இருக்க வேண்டுமென்பதில் அவருக்குள்ள ஆர்வம் சொல்லத்தரமன்று ஹிந்து-முஸ்லீம்கள் ஒன்றுபட்டு ஒருமுகமான கோரிக்கை விடுத்தாலும், வேறு சாக்குச் சொல்லி

'சங்கீத கலாநிதிகள்'

இதிலிருப்பவர்களெல்லாரும் யாரென்று தெரிகிறதா? சங்கீத வித்வத் சபை மகாநாட்டுக்குத் தலைமை வகித்தவர்கள். (இடதிலிருந்து) 1. டைகர் வரதாசாரியார், 2. மழவராயனேந்தல சுப்பராம பாகவதர் (இந்த வருடம் தலைமை வகித்தவர்) 3. கே. வாஸுதேவாச்சாரியார். 4. சங்கீதரத்னகரம் அரியக்குடி ராமானுஜய்யங்கார், (நிற்பவர்கள் இடமிருந்து) 5. மூதிரி சுப்பிரமணிய அய்யர் 6. பொன்னையா பிள்ளை, 7. ஸ்ரீ டி. வி சுப்பராவ்,

காயகசிகாமணி முத்தையா பாகவதர் உமையாள்புரம் ஸ்வாமி நாதய்யர், த்வாரம் வெங்கிடசாமி நாயுடு ஸ்ரீ ஸபேசய்யர் ஆகியவர்களுக்கும் இபபட்டம் வழங்கப்பட்டது.

சங்கீத வித்வத் சபைக் கமிட்டி

சங்கீத வித்வத் சபை கமிட்டியைச் சேர்ந்தவர்கள்.

அதைத்தட்டிக் கழிக்கப் பிரிட்டனுக்கா தெரியாது என்றும் அவர் கேட்கிறார். அவர் சொல்லும் பரிகாரம் ஒன்றுமில்லை. இந்தியாவின் இன்னல்கள் தீர கவலையற்றுக் கால தேவதையையே பொறுத்திருப்போமென்பதுதான் அவர் உபதேசம்.

* * * *

மாக்ஸ்வெல் வீட்டில் களவு

இந்திய சர்க்கார் உள்நாட்டு மெம்பர் ஸர் ரெஜினல்ட் மாக்ஸ்வெல் வீட்டிலிருந்து சமையல் பாத்திரங்களும், மற்றும் பல சாமான்களும் களவாடப்பட்டன என்று புது டில்லி போலீஸாரிடம் ரிப்போர்ட் தாக்கலாகியிருக்கிறது.

* * * *

பம்பாயில் உணவுக் கட்டுப்பாடு

1943-ம் வருடம் மார்ச் மாதம் முதல் பம்பாய் நகரத்திலும் அதற்கு அருகிலுள்ள ஜில்லாக்களிலும் அரிசி முதலிய உணவுப் பொருள் சப்ளை விஷயத்தில் கட்டுப்பாடு ஏற்படுத்தப்படும். தற்போது நகரத்தில் உணவுப் பொருள் தானியங்கள் கிடைக்காத கஷ்டம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. சர்க்கார் தானியங்கள் சப்ளை செய்யும் விடுதிகளுக்கு எதிரில் ஸ்திரீகளும், குழந்தைகளும் கூட்டமாக காணப்படுகின்றனர். பண்டங்கள் கிடைக்காத கஷ்டத்தை முதலாளிகளுக்கு தெரிவிப்பதற்கு அறிகுறியாக பலதொழில் ஸ்தாபனங்கள் வேலை நிறுத்தம் செய்தன. பலதுணி நெசவுசாலைகளும் வேலையாட்களுக்கு சப்ளை செய்யும் குறிப்பிட்ட அளவை குறைத்திருக்கின்றன. சர்க்கார் கட்டுப்பாடு இல்லாததில் அரிசி ரகங்களின் விலை இருமடங்கு அதிகரித்திருக்கின்றது. கோதுமை இரகசியமாகக் கிடைப்பதேயல்லாமல் வேறுவிதம் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. 3000 டன் கோதுமையும், 500 டன் அரிசியும் இம்மாகாணத்தில் இறக்குமதி செய்யப்படும் என்ற எண்ணம் சித்திபெறவில்லை.

* * * *

பிரசவ வேதனையில் வெடிகுண்டு!

சமீபத்தில் கல்கத்தாவில் நடந்த விமானத் தாக்குதல்களில் பிரசவிக்கும் தறுவாயில் இருந்த ஒரு ஸ்திரீயின் மன அமைதியும் நிர்ப்பயமான நிலையும் போற்றத்தக்கது. அவர் பிரசவ வேதனையிலிருந்தபோது அவர் வீடு மீது நேராக குண்டு ஒன்று விழுந்தது. அதனுல் சில காயங்களும் ஏற்பட்டன. பிறகு ஆஸ்பத்திரியில் அவருக்கு ஒரு குழந்தை பிறந்தது. தாயும் குழந்தையும் "குண்டு" மாதிரி சௌக்கியமாக இருக்கின்றனர்.

* * * *

ஐரோப்பியச் செய்திகள்

ரஷ்யர் வெற்றி

மாஸ்கோவுக்கு மேற்கேயுள்ள வெலிகி லூகி என்ற ஸ்தலத்தை ரஷயர் கைப்பற்றி விட்டார்கள். அவர்கள் திரும்பப் பிடித்த ஜெர்மன் தளங்கள், அனைத்திலும் இதுவே மிகப் பெரிது. இவ்வெற்றி விசேஷ

ராணுவ முக்கியம் வாய்ந்தது. சில தினங்களுக்கு முன்னதாகவே, ரஷயர் அந்த ஸ்தலத்தை எல்லாத் திக்குகளிலும் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். இறுதியாக, மேற்கு திக்கிலிருந்து அவர்கள் மிகத் தீவிரமாகத் தாக்கி அந்நகருக்குள் புகுந்தது குறிப்பிடத்தக்கது. ஜெர்மனியிலிருந்து ரிகா வழியாகச் செல்லும் முக்கிய சப்ளை மார்க்கங்களில் ஒன்று இதன் மூலம் குலைந்து போய்விட்டது. வெலிகி லூகியிலிருந்து ரஷயர் இன்னும் மேற்கே முன்னேறக் கூடும்; ஸ்மோலன்ஸ்கை நோக்கியும் பாயலாம். ரிஷவில் உள்ள ஜெர்மன் படைகளின் திண்டாட்டம் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை. ஸ்டாலின் கிராட் பகுதியிலும் ரஷயருக்கு பிரமிககத்தக்க வெற்றி கிடைத்து வருகிறது. அந்நகருக்குத் தெற்கேயுள்ள எலிஸ்டா என்ற முக்கிய ஸ்தலத்தை அவர்கள் திரும்பப் பிடித்துவிட்டனர்.

மத்திய டான் பகுதியில் ரஷ்ய முன்னேற்றம் மிக வேகமானது. பல ஜெர்மன் படைகள் சிதறடிக்கப்பட்டதுடன் ஏராளமான எதிரித் துருப்புகள் ரஷ்ய ராணுவ வளையத்துக்குள் சிக்கியிருக்கின்றன. ஸ்டாலின்கிராட்-காகஸஸ் அரங்கங்களுக்கான ஜெர்மன் சப்ளை தளங்களில் முக்கியமானது ராஸ்டாவ் அதற்கு நான்கு திக்குகளிலிருந்து ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது. காகஸஸில் மோஸ்டக் என்ற முக்கியமான தளத்தையும் நாஸிகள் பறிகொடுத்து விட்டனர். ஸ்டாலின்கிராடைப் பிடித்து பிறகு மாஸ்கோவைப் பின்புறத்தில சூழ்ந்துகொண்டு ரஷ்யரை முறியடிக்க ஹிட்லர் எண்ணியிருந்தார். அது ஈடேறாததுடன், இப்பொழுது அவர் தனது துருப்புகளில் பெரும் பகுதியையும மிக சிரமத்துடன் கைப்பற்றிய பல ஸ்தலங்களையும் பறிகொடுக்க நேர்ந்திருக்கிறது. குளிர்காலம் முடிந்ததும் ரஷ்யரைச் சிதைக்கப் போவதாக ஹிட்லர் சொல்லி ஜெர்மன் மக்களைத் தட்டிக் கொடுக்கிறார். ஆனால் குளிர் முடியும் போது அவர் பெரிய தாக்குதல் எதுவும் துவக்கக் கூடிய நிலையிலிருப்பாரா என்று தெரியவேண்டும்.

ஆப்ரிக்கா அரங்கம்

எகிப்திலிருந்து பின்வாங்க ஆரம்பித்த ரோமலின் படைகள் டிரிபோலிடானுவுக்குள் வெகு தூரம் சென்றும், இன்னும் நின்று எதிர்ப்பதற்கான அறிகுறிகளைக் காணோம். டியுனிஸியா பகுதியிலுள்ள அச்சுப் படைகளுடன் சேர்ந்து கொள்வதே அவற்றின் கருத்தாயிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. வட ஆப்பிரிக்காவின் மறு கோடியிலிருந்து முன்னேறிய நேசப் படைகள் டியுனிஸியாவுக்குள் துரிதமாக முன்னேறக்கூடவில்லை. பருவ நிலைக் கோளாறு, போதிய உதவிப் படைகள் வரவில்லை என்ற இருகாரணங்கள் சொல்லப்படுகின்றன. இதற்கிடையில் எதிரியின் படை பலம் அதிகரித்த வண்ணமாயிருக்கிறது. ரஷ்யத் தாக்குதலின் வேகம் தணியாதவரை அப்போர் முனையிலிருந்து ஜெர்மனியர் பெருவாரியான படைகளை ஆப்பிரிக்க அரங்கத்திற்கு மாற்றுவதற்கில்லை. இச் சந்தர்ப்பத்தை ஆப்பிரிக்க அரங்கத்திலுள்ள நேசப் படைகள் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இன்னும்தயங்கி நிற்கக் காரணங்கள் சொல்லிக்கொண்டிருப்பது, சந்தர்ப்பத்தைக் கை நழுவிவிடுவதாகும

* * * *

தென் மேற்கு பஸிபிக்

நியுகினி, ஸாலமன்ஸ் தீவுகளில் தீவிரப் போர் நடந்து வருகிறது. ஆனால் மேற்கேயுள்ள அச்சு நாடுகளுக்கு ஏற்பட்டிருப்பது போன்ற சங்கடம் ஜப்பானுக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்ல முடியாது. நியுகினியில் கடற்கரை போரமையுள்ள பியுனாவைப் பிடிக்க நேசப் படை பலவாரங்களாக முயன்று வருகிறது. எதிரிப் படை வரிசையில் இதுவரை இரு பிளவுகள் ஏற்பட்டிருக்கின்றன. பியுனாவில பெரும் பகுதி நேசப் படையின் வசமாகிவிட்டதாயினும் ஜப்பானியரை நியுகினி தீவினின்றும் துரத்தியடிக்கும் வேலை துரிதமாக நடந்தேறுமெனத் தோன்றவில்லை. குடால்கனுலிலிருந்தும் இன்னும் எதிரிகளை விரட்டவில்லை. இவ்வரங்கத்தில் நேசப் படைகள் போதிய அளவு வலுப்படுத்தப் படவில்லை யென்பது தெளிவு. ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி இதுபற்றி முறையிடு விடுத்திருக்கிறார். நேசக் கட்சி ஏக காலத்தில் பல்வேறு போர் முனைகளைச் சமாளித்தாக வேண்டியிருக்கிறது; எல்லா இடங்களுக்கும் போதியபடை பலம் அனுப்புவது கஷ்டந்தான். ஆனால் பஸிபிக் அரங்கத்தை அப்புறம் கவனித்துக்கொள்ளலாமென்று நேச அதிகாரிகள் அலட்சியமாயிருந்தால் அங்கு நிலைமை மிகவும விபரீதமாகப் போய்விடும். ஜப்பான் ஏற்கனவே மிகச் செழிப்பான பல பிரதேசங்களைப் பிடித்திருக்கிறது. சென்ற ஒரு வருஷமாக அவற்றின் வளங்களைக் கொண்டு தனது யுத்த இயந்திரத்தை வலுப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறது; மேலும் வலுப்படுத்த விடக்கூடாதென ஆஸ்திரேலிய யுத்த மந்திரி எச்சரிக்கிறார்.

* * * *

லவால்-ஹிட்லர் சந்திப்பு

பிரான்ஸிலிருந்து கிடைத்த தகவல் வருமாறு:—

ஹிட்லரைக் கண்டு பேசிவிட்டு லவால் அவமானத்துடன் திரும்பியிருக்கிறார். அவரைப் பார்த்தபொழுது திடீரென அவர் 15 வருஷம் அதிக வயதானவராகத் தோன்றினார்.

ஹிட்லர் அறைக்குள் லவால் சென்றதும் அங்கு எல்லாம் அவருக்கு விபரீதமாகவே காணப்பட்டதாக அவருடன் நெருங்கிப் பழகியவர் கூறுவதிலிருந்து தெரிகிறது. ஜெர்மன் யதேச்சாதிகாரியே முழுவதிலும் பேசி வந்தார். யுத்த நிறுத்த ஏற்பாட்டிற்குப் பிரான்ஸ் துரோகஞ் செய்துவிட்டது; ஜெனரல் ஜிராடு துரோகியாகிவிட்டார் என்பதாக ஹிட்லர் திட்டினார். ஜெனரல் வேகண்டு கிழக்கு பிரஷ்யாவுக்குச் சென்றிருப்பதாகவும் லவாலிடம் அவர் ஞாபகப்படுத்தினார்.

பல பிரஞ்சுத் தலைவர்கள் நேச தேசங்களுடன் சேர்ந்து கொண்டு விட்டதாகவும், ஜெர்மனி வேண்டுவது செய்கையேயன்றி பசப்பு வார்த்தைகள் அல்லவென்றும ஹிட்லர் வற்புறுத்தினார்.

ஹிட்லரின் ஆத்திரப் பேச்சு லவாலை திடுக்கிடச் செய்தது. ஹிட்லர் வசை மொழிகளைக் கொட்டியபொழுது லவால் முழுவதிலும் நின்றுகொண்டே இருந்தார். முடிவில் அவர் உட்கார அனுமதி கோரினார். 'சரி' என்று கவுண்டுஸியானே கண்டிப்பான குரலில் பதில் சொன்னார்.

* * * *

இந்தியா-பர்மா உதவி மந்திரி

டெவான்ஷயர் பிரபு காலனிகளின் உதவி மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்தியா, பர்மா உதவி மந்திரியாக மன்ஸ்டர் பிரபு நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * * *

(17-ம் பக்கம் பார்க்க)

சீவக சிந்தாமணி-28.

அசோதரனும் அன்னக்குஞ்சும்

வ. வேணுகோபாலன் எழுதியது

இரத்தினப் பிரபையின் தரும உபதேசத்தால் சீவகன் மனம் தூய்மை பெற்றது. ஆசை என்ற வேர் அவன் உள்ளத்திலிருந்து அறுந்தது. மீண்டும் இரத்தினப் பிரபையை நோக்கி, "அடிகளே, எம்முடைய முற்பிறப்பையும் அப் பிறப்பில் நாங்கள் செய்த பாவங்களையும் சொல்ல வேண்டும்" என்று சீவகன் கேட்டான். புன்முறுவலுடன் இரத்தினப் பிரபை சொல்லலானுன்: "மன்னவ, நாகலோகத்தின் ஒரு பகுதியில் தாதகி என்ற ஒரு நாடு உள்ளது. அந் நாட்டில் பூமிமாதிலகம் என்னும் நகரம் உள்ளது. அந் நகருக்கு மன்னன் பவணமாதேவன் என்பான். அவன் மனைவி பெயர் சயமதி. அவர்களுக்குப் புதல்வன் அசோதரன் என்பவன். அவன் தக்க பருவத்தில் பருவ மங்கையர் எண்மரை மணந்து இன்புற்றிருந்தான். ஒரு நாள் அசோதரன் தன் மனைவியருடன் நீர் விளையாட்டிற்குத் தாமரைத் தடாகத்தை அடைந்தான். மனைவியருடன் நீர் விளையாடினுன். பின்னர் தடாகத்தின் நடுவில் உள்ள நீராவி மண்டபத்தில் அமர்ந்து மனைவியருடன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது தடாகத்தில் உள்ள தாமரைப் பூக்களில் விளையாடிக் கொண்டிருந்த அன்னப் பறவைகள், அசோதரனையும் அவன் மனைவியரையும் கண்டு அஞ்சி மேலே பறந்து ஓடின. பறக்க முடியாத அன்னக் குஞ்சுகள் தடாகத்திலுள்ள தாமரைப் பூக்களில் மறைந்து கொண்டன. பொன் தட்டுகளில் வெள்ளிக் கிண்ணங்களை வைத்தாற் போன்று அவை தோன்றின.

அசோதரன் மனைவியர், அன்னக் குஞ்சுகளின் மீது அன்பு கொண்டனர். குஞ்சுகளைப் பிடித்துப் போக வேண்டும் என்று எண்ணியவராய், அசோதரனை நோக்கி, "ஐயனே, அந்தக் குஞ்சுகளில் ஒன்றை பிடித்துத் தாரும்" என்று கூறினர். அசோதரன் ஏவலாளரை ஏவி ஒரு குஞ்சைப் பிடித்து வரச் செய்து மனைவியரிடம் கொடுத்தான். மனைவியர் அவ்வன்னக் குஞ்சை அன்புடன் அணைத்து முத்தமிட்டனர். மார்போடு தழுவிக் கொண்டு மகிழ்ந்தனர். பின்னர் அசோதரன் மனைவியருடன் அரண்மனை சென்றான். மனைவியர் அன்னக் குஞ்சையும் எடுத்துச் சென்றனர்.

அசோதரன் மனைவியர், அன்னக் குஞ்சை அன்புடன் பாலமுது ஊட்டிப் பாதுகாத்து வந்தனர். சிறு குஞ்சு என்ற பரிவால், கூட்டில் அடைக்காமல் தம் மார்பில் வைத்து வளர்த்து வந்தனர். ஒரு நாள் அசோதரன் தந்தையாகிய பவணமாதேவன் என்பவன், மகளிர் மார்பில் வைத்து வளர்க்கும் அன்னக் குஞ்சைக் கண்டு திடுக்குற்றான். உடனே கோபம் கொண்டு மந்திரியரை நோக்கி, "அன்னக் குஞ்சைப் பிடித்தவர் யார்?" என்று கேட்டான். "அசோதரன் பிடித்துத் தந்தான்" என்று அவர் மறுமொழி கூறினர். "அசோதரனை அழைத்து வாருங்கள்" என்று அரசன் கட்டளையிட்டான். உடனே மந்திரியர் சென்று அசோதரனிடம் கூறினர். அசோதரன் விரைந்து சென்று தந்தையை வணங்கி வாய் புதைத்து நின்றான்.

பவணமா தேவன் அவனை நோக்கி, குமர, "அன்னப் பார்ப்பைத் தாய் தந்தையினின்றும் பிரித்ததற்கும் அது தான் நினைத்தபடி இயங்காமல் சிறை செய்ததற்கும் தக்க பயனை விளைத்துக் கொண்டாய். பெரிய தீவினை நெஞ்சு வழியாகப் புகுந்து, தம்மைச் செய்த உயிரோடு கூடிக் கொல்லும். கொல்லுகையில் அவ்வுயிர் பெரிதும் துன்புறும். ஆதலால் தீவினைக்குக் காரணமான உயிர்க் கொலையை நீ செய்யாதே. கொல்லாமை யென்பது தருமங்களில் பெரிய தருமம். உண்மை பேசினுல் இம்மையிற் புகழும் மறுமையில் மேலுலகத்து இன்பமும் பெறலாம். பொய் கூறினுல் இம்மையில் பழியும், மறுமையில் நரகமும் பெறலாம். களவு செய்தவரை மன்னர், யானையால் கொல்லச் செய்வர். நரகத்தில் அரிய துன்பங்களை அடைவர். பிறர் மனைவியரைச் சேரின் பெருந்துன்பம் அடைவர். தீய வழியில்லாமல், நல்ல வழியில் தேடிய பொருள் இம்மையில் புகழை விளைக்கும். மறுமையில் சுவர்க்கம் போவதற்கு ஏணிபோன்று உதவும். இன்பத்திற்கு இருப்பிடமாயினும் துன்பத்தைத் தருதலால் பரத்தையரின் உறவு கூடாது. வஞ்சனைமிக்க சூதாடுதலையும் கைவிடுதல் வேண்டும். காமமுடையவரும் கோபமுடையவரும், மாலையையும் சந்தனத்தையும் பூசுபவரும், பிச்சையேற்பவரும் நம்மை ஆட்கொள்ளும் கடவுளர் அல்லர். அருகதேவன் ஒருவனே நம் கடவுள். விலங்கையும், பறவையையும் தம் சேர்க்கையினின்றும் பிரித்துச் சிறை செய்தவர், மறுமையில் தாமும் அவ்வாறு பிரிக்கப்பெற்று சிறைப்படுவர். ஆதலால் நீ செய்தது தவறு. அல்லின் தண்டு அறுந்தபொழுதும் நூல் அறுபடாமல் தொடர்ந்து நிற்றல்போல் தம் உடம்பு அழிந்த பின்பும், தீவினையாகிய தீ அவ்வுயிரை நீங்காது தொடர்ந்து உயிர்புகுந்த உடம்பில் தானும் புகுந்து அவ்வுயிரை வருத்தும். தருமமுடையவராய் எல்லா உயிர்க்கும் அருள் செய்வராயின் அந் நல்வினை, அவருயிரைத் தொடர்ந்து வேண்டிய இன்பங்களை அளிக்கும். யாகத்தூணில் கட்டிய ஆமை, தான் கிடந்த தடாகத்தையும், துணை ஆமையையும் நினைப்பதுபோல் அறிவில்லாதவர், காமத்தையும் பொருளையும் நினைந்து உயிர் விடுவர். தவமிக்கவர், பிறந்தால், மகளிரையும் பொருளையும் நீக்கித் தருமத்தைச்செய்ய எண்ணுவர்" என்று கூறினன்.

தந்தையின் மொழி கேட்ட அசோதரன், அஞ்சிப்பதைபதைத்தான். உடல் நடுங்க ஓடினுன். ஆடையில் பற்றிய தீயை அணைப்பவன்போல் கலவரத்துடன் ஓடி, மனைவியரிடமிருந்த அன்னக்குஞ்சை வாங்கித் தாமரை தடாகத்தில் போக விட்டான். மகளிர் வாயிடத்துக் கொண்ட அமுதைப்போல் அவர் வசப்பட்டிருந்த அசோதரன் உண்மை அறிவுபெற்றான். உடம்பிலுண்டாகிய புண்ணை நீக்க முயலும் முயற்சிபோலக் காமத்தை வெறுத்தான். பாவத்திற்கு அஞ்சினுன். தான் செய்த தீவினையை எண்ணி உருகினுன். உடனே அரசனிடம் சென்று, "தந்தையே, தீவினை நீங்கத் துறந்து தவம் செய்வேன்" என்றான். அரசன் அதற்கு மனம் வருந்தி, "மகனே அரசுரிமையைப் பெற்றுக் காவல் செய்து, பின்னர், புதல்வர்க்குத் தந்து துறப்பாயாக" என்றான். "தந்தையே, சிறையிலிருந்து தப்பிப்போகின்றவனை, சிறையில் அழுத்துகின்றவர் உறவினரோ, பகைவரோ" என்றான் அசோதரன். விலை மதிப்பிடற்கரிய மணியை நடுக்கடலில் நழுவ விட்டவன்போல் மன்னன் மனம் கலங்கினுன். "முன்பு போன பிறவிகளில் யாம் இவனுக்கு உறவினரல்லோம். இனிப்பிறக்கும் பிறவிகளிலும் இவனுக்கு உறவினராகோம். ஆதலால் உறவென்பது இல்லை" என்று நினைந்து அன்பாகிய கட்டை அரசன் அறுத்தான். அசோதரன் துறவுக்கு அனுமதி தந்தான். அரசனது பற்றுவிட்டுக் கூறிய சொல்லால் அசோதரன் துறத்தற்குச்சென்றான், அரசிளங்குமரர் பலர்சூழ அசோதரன் தவப்பள்ளி சென்று துறவு பூண்டான். வாலைப்பிடித்து இழுத்தகாலத்தும் தான் பற்றிய இடத்தை விடாத உடும்புபோல் வாரை இல்லறத்திலிருந்து நீக்கல் அரிது. அசோதரன் தந்தை கூறிய ஒரு சொல்லால் துறவு பூண்டு தவம் செய்து முனிவனுயினுன். பின்னர் அவன் தந்தையும் தாயும் மனைவியரும் துறவு பூண்டு தவம் செய்து முக்தி பெற்றனர். சீவக, பவணமாதேவனுக்கு சமயதிக்கும் மகனுய்த் தோன்றி துறவு பூண்டு முனிவனுகிய அசோதரன் நீ தான். தவம்செய்த பின்னர் சாசாரன் என்னும் இந்திரனுய் அதன் பின் இப் பிறவியை அடைந்தாய். முற்பிறப்பில் உன் மனைவியராய் இருந்தவரே இம்மனைவியர் எண்மரும். நீ முற்பிறப்பில் அசோதரனுய் அன்னப பார்ப்பைப் பிரித்தாய். அத்தீவினையால் இப்பிறப்பில் நீயும் பிரிவுற்றாய். அதனைக் காவல் செய்து வைத்த தீவினையால் நீயும் சிறைப்பட்

டாய்'' 'என்று இரத்தினப் பிரபை மொழிந்தார்.

சீவகனும், தேவியரும் தம் முற்பிறப்பைக் கேட்டு வியந்தனர். உடனே, சாரணர் இருவரையும் வணங்கி வலம் செய்தனர். அவர்கள் இருவரும் விடைபெற்று ஆகாயத்தே சென்று மறைந்தனர். சீவகனும் மனைவியரும் அரண்மனை சென்றார்கள்.

* * * *

ஆலோசனை மண்டபத்தில் சீவகன் வீற்றிருந்தான். அருகில் மந்திரியரும் ஏவலாளரும் நின்றனர். "நந்தட்டனை அழைத்து வாருங்கள்" என்றான் ஏவலாளரிடம். ஏவலாளர் சென்று நந்தட்டனிடம் அரசன் மொழியை அறிவித்தனர். நந்தட்டன் விரைவில் சென்று சீவகனை வணங்கி, "வேந்தே, நினைத்த காரியத்தைக் கூறுக; ஏவலின்படி நடப்பேன்'' என்றான்.

"நந்தட்ட, நான் துறவுபூண்டு செல்வேன். நாட்டை நீ ஆட்சி செய்ய வேண்டும்'' என்றான் சீவகன்.

"நாடாயினும், அதற்கு மேலான சுவர்க்கமாயினும், அதற்கு மேலான மோட்சமாயினும் அவற்றைப் பெற்று வாழும் வாழ்க்கையை யான் வேண்டேன். உன் பாதத்தைவழிபட்டு வாழ்வதொன்றே யான் வேண்டுவேன். தாம் துறந்தால் யானும் உடன் துறந்து வருவேன்'' என்று நந்தட்டன் கூறினான்.

அவன் வார்த்தையையும் உறுதியையும் கேட்டு சீவகன் மகிழ்ந்தான். உடனே தன் மூத்த மகனாகிய சச்சந்தனுக்கு முடிசூட்ட எண்ணி, அவனை அழைத்து வருமாறு ஏவினான். அறிவிலும் ஆற்றலிலும், வயதிலும் மூத்தவனான சச்சந்தன் சீவகனுக்கு முன் வந்து வணங்கி நின்றான். அவனை அன்புடன் ஆதனத்தில் இருத்திச் சீவகன் கூறலானான். "குமர, இந்நாட்டை நீ தருமம் தவறாமல் ஆள்வாயாக. யான் துறவுபூண்டு தவம் செய்யச் செல்கிறேன். யானைக்கு நெல்லை அரிந்து முறையாகத் திரட்டி உண்பித்தால் அதற்கு உணவாகும். வயலும் அழிவுறாது. அவ்வாறில்லையேல், யானை வயலில் மேய்ந்து உணவும் இல்லாமல், வயலையும் அழித்து விடும். ஆதலால் அரசன், முறை தவறாது வரி கொள்ள வேண்டும். குடிமக்களும் அவன் விரும்பியபடி வரியளப்பர். உலகத்து மக்களுக்கு நெல்லும் உயிர், நீரும் உயிர் யான் கூறுவது, அவ்விரண்டும் உயிரல்ல என்பேன். மன்னனே, அவர்க்குச் சிறந்த உயிர் தேர்ப்பாகன், தேரைச் செலுத்தத் தக்க நிலத்தில் செலுத்தினால் பல நாள் செல்லலாம். செலுத்தும் நிலத்தை அறியாமல் செலுத்தினால் தேர் முறியும்; தானும் வீழ்வான். அரசா தன்மையும் அதுபோலவேதான். பகைவர்மீது கொண்ட கோபத்தை மறைத்திருந்து, அவர்க்கு நன்மையைச் செய்து அவரறியாமல் தக்க சமயத்தில். தம், பகையை அழித்தல் வேண்டும். புகழ் கெடுதலுக்காக அஞ்சிப் பொய் வார்த்தையைக் கூறாதே. மந்திரியர்க்கு எப்போதும் அருள் புரிதல் வேண்டும், குடிமக்கள் பழி கூறாதபடி பூமியைக் காப்பாயாக'' என்று கூறி அவனுக்கு முடிசூட்டினான்.

அவனுக்குப் பின், இலக்கணையின் புதல்வனான, கோவிந்தனுக்கு அரசுரிமையை அளித்தான். குணமாலையின் மைந்தனாகிய சுதஞ்சணன் என்பவனுக்குப் பட்டம் கட்டி இளவரசாக்கினான். அதன் பின் நந்தட்டன் புதல்வனுக்கு முடி சூட்டினான். மற்ற மைந்தர்களுக்கு இளவரசு பட்டம் அளித்து தேர், யானை, குதிரை முதலியவற்றையும் அளித்தான். தன் தோழர் தனக்குச் செய்த உதவிகளை அவர் மைந்தரும் தன் மகனுக்குச் செய்யுமாறு அமைத்தான். பின்னர் தான் துறவுபூண இருப்பதை யாவருக்கும் வெளிப்படக் கூறி அந்தப்புரம் சென்றான்.

அந்தப்புரத்தில் தேவியர், உல்லாசமாகப் பொழுதுபோக்கி இருந்தனர். சீவகன் அங்கு விரைந்து வருவதைக் கண்டதும் தேவியர் பூங்கட்டிலை விட்டு எழுந்து முன் சென்று அவன் பாதங்களை வணங்கி நின்றனர். சீவகன் அவர்களை அருள் கனியப் பார்த்து "நங்கையரே, உங்கள் மனம் எல்லையில்லாது பரந்த அளவுடையது. அதை ஒரு நிலைப்படுத்தி யான் கூறும் உறுதிமொழிகளைக் கேளுங்கள்'' என்றான். "ஐயனே தங்கள் விருப்பப்படிக் கேட்கின்றோம்'' என்றனர் தேவியர்.

"நங்கையரே, வலம்புரிச் சங்கம் கடலில் மட்டுமே தோன்றும். குளத்தில் தோன்றா. அதுபோல செல்வமுடையவர்க்கல்லது மிடியரால் (தரித்திரர்) தானமும் தவமும் செய்தல் இயலாது, மலையிலல்லது வைரம் தோன்றா. குளத்திலல்லது குவளை பூவா. அவ்வாறு தகுதியுடையவரல்லது பகுத்துண்பவர் இல்லை. மகளிர் சிறிதளவேனும் இரவலர்க்குத் தானம் செய்தல் வேண்டும். முனிவர்க்கு உணவளித்தல் துறக்கத்திற்கு வழியாகும். கொலைத்தொழிலை நீக்கி, ஊனும் தேனும் உண்ணுதலைத் தவிர்த்தால் விண்ணும் மண்ணும் அவர் ஏவலின்படி நிற்கும். அவ்விரதங்கள் உங்களுக்கு முன்னரே அமைந்துள்ளன. முற்பிறப்பில் சீலத்தைக் காத்தவர் இப்பிறப்பில் தேவராய் பிறந்து இன்பம் நுகர்வர். முற்பிறப்பில் இரவலர்க்கு இட்டு உண்ணாதவர் இப்பிறப்பில் இரவலராய்த் தோன்றி ஏற்றுண்டு வருந்தி வாழ்வர். ஓட வன்மையுடைய தாயின் வேடன் கையிலிருந்து தப்பி ஓடும் மானும் உண்டு. அவ்வாறு தப்பாதபடி எமன் நம்மைப் புடைத்து உண்பான். வேடரிடம் அகப்படாமல் நல்வினையால் பிழைத்துப் போகும் பறவைகளும் உண்டு. அதுபோலவே நாமும் நல்வினை செய்தால் எமனிடமிருந்து தப்பிப் பிழைக்கலாம். தேய்ந்தும் வளர்ந்தும் தோன்றுகிற சந்திரன் உடம்பிற்குச் சாதலும் பிறத்தலும் உண்டு என்பதை உணர்த்துகிறான். நல்வினை செய்யாத உயிர் பிறந்தும் இறந்தும் வருந்துகின்றது. யான் கூறும் தருமத்தைக் கேட்டு மறவாமல் அதைக் காப்பீராக. மருந்தும் மந்திரமும் இல்லையானால் பாம்பைத் தொட்டுப் பிடித்து ஆட்டுவாரும் இல்லை. அது போல் நறுமணம் தமக்கு இல்லையானால் மகளிர்ப் பக்கம் மைந்தர் போகார். முன்பு நீங்கள் வாசனைப் பொருளும் வெற்றிலையும் தின்று சிறப்புற்றீர். அது தின்னாமல் என்னுடன் பேசுதல் அரிது: அவ்வாறு பேசின் சிறக்காது. கபம், வாதம், பித்தம் இரத்தம் முதலிய நிறைந்த இவ்வுடலில் கெட்ட நீர் ஊற்றெழும். சந்தனத்தையும் பூவையும் முன்பு அணிந்தமையால் இவ்வுடம்பு கமழுமாயினும் பின்னும் அணிந்தாலல்லாது உம்மைத் தழுவ முடியாது. பிறந்த போதே இனி இறந்தோம் என்று தெரிந்து நாம் மனத்தை ஒரு நிலைப்படுத்தவில்லை. கண்களும் ஒலி கெடும். இமை அழியும். ஆதலால் மூப்பு வருவதன் முன் துறந்து விடுங்கள். செல்வர் இரந்துண்டு வாழ்கின்றதைக் கண்டேன். ஆதலால் எனக்கு அரசாட்சியில் ஆசையில்லை. இனி, யான் துறந்து தவம் செய்வேன்'' என்று சீவகன் கூறினான்.

சீவகன் மொழியைக் கேட்டதும் இடியொலி கேட்ட பாம்புகள் போல் தேவியர் மனம் கலங்கினர். சீவகன் மீண்டும் அவர்களை நோக்கி, "நங்கையரே; இதற்கு முன் இல்லறத்தில் விருப்புடையவராய் இருந்தேன். சாரணரிடம் தருமம் கேட்டபின் அதனைக் கைவிட்டேன்'' என்று கூறினான். மகளிரெண்மரும் கண்ணீர் பெருக அழுதனர். வேய்ங்குழல் ஏங்கி அழுவது போல் வாய் விட்டுப்புலம்பினர். சீவகன் பாதங்களில் விழுந்து புலம்பினர். அவனுடைய திருமேனியின் வனப்பை வருணித்து அரற்றினர். அவனது பாதம் முதல் முடி வரையில் உள்ள அங்கங்களைப் புகழ்ந்துகூறினர், தாம் அவனிடத்து நுகர்ந்த இன்பத்தை எடுத்துக் கூறி அழுது பிரலாபித்தனர். காந்தருவதத்தை முதல் இலக்கணை இறுதியாக மனைவியர் எண்மரும் ஒருவரை ஒருவர் சுட்டிக் காட்டி அவர்களை அரசர் கலியாணம் செய்த தன்மையைச் சொல்லி அரற்றினர். கல்லும் மரமும் கரைந்து இரங்கும் படிக் கதறினர். முகத்தையும் மார்பையும் புடைத்துக் கொண்டனர். தம் அங்கங்களை வெறுத்துக் கூறினர். மாலைகளை அறுத்தெறிந்தனர். ஆபரணங்களைக் கழற்றி எறிந்தனர். கூந்தலை அவிழ்த்துச் சிதறச் செய்தனர். சிலம்பையும் கிண்கிணியையும் மேகலையையும் கழற்றி வீசினர். தேவியர் அழுவதையும் அவரது அலங்கோலத்தையும் கண்டு மற்ற மகளிரும் ஓ என்று அலறிப் பூசலிட்டுப் புலம்பினர். எல்லா திசைகளிலும் நிறைந்த அழுகை ஒலி கடலொலிபோல் மிக்கது. அரண்மனை முழுவதும் புலம்பொலியைக் கேட்டு யாவரும் சீவகன் துறவை அறிந்தனர். பிரலாபித்தனர், மங்களவாத்தியங்கள் ஒலி அவிந்தன, மக்கள் யாவரும், அலங்காரமின்றி அகங்குழைந்தனர், நகர் முழுவதும் அழுகிழந்தது. எங்கும் அழுகை. கடல் போல் கலங்கியது நகரம், நகர மக்கள் யாவரும் அரண்மனையைச் சூழ்ந்து ஆரவாரத்துடன் சீவகன் துறவைத் தடுப்பதற்கு நின்றனர். "நாங்களும் துறந்து உடன் வருவோம்'' என்று அறிஞர் பலர் ஓலமிட்டனர். மகளிரும் மாந்தரும் கண்ணீர் பெருகக் கலங்கி நின்றனர். நகரம் பொலி வழிந்து இருள் சூழ்ந்த காடு போல் தோன்றியது.

அடுத்த வாரம்:—

பெரிய யாத்திரை

ரா

த சு

மித்திரன் ஆசிரியர்

ஸ்ரீ. ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

எழுதிய

பன்னிரு பெரியார்களின் அரிய சொற் சித்திரங்கள் கொண்டது.

ஸ்ரீ. "வ. ரா'' முன்னுரையுடனும், படங்களுடனும் கூடியது.

விலை ரூ. 1. தபால் செலவு அணா 6.

எல்லா மித்திரன் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

மானேஜர், "சுதேசமித்திரன்'' புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

சிறுவர் கதை

நாரதரின் ஆசை

"கோபு''

நாரதர் நித்ய பிரும்மசாரி: அவர் விவாகமே செய்து கொள்ளாதவர். இதனால் அவர், தான் உலகில் உயர்ந்த ரிஷி என்று பெருமை பேசிக் கொண்டார். இதனால் ரிஷிகள் அவரிடம் வெறுப்புற்றனர்.

ஒரு நாள் அவர் வைகுண்டத்திற்கு நாராயணனைத் தரிசிக்கச்சென்றார். நாராயணன் ஆதிசேஷன் மேல் சயனித்திருந்தார். லக்ஷ்மி அவரது காலடியில் உட்கார்ந்து அவரது பாதத்தை வருடிக் கொண்டிருந்தாள்.

நாரதர் அவருக்கு நமஸ்காரம் செய்து, "பகவானே க்ஷேமமா?'' என்றார்.

"மஹர்ஷே! நான் லக்ஷ்மியின் நாயகனாய் இருக்கிறேன். என் க்ஷேமத்திற்கென்ன குறை'' என்றார்.

நாரதர் ஏளனமாக சிரித்து விட்டு "ஸர்வலோக நாயகனான தாங்களே ஒரு பெண் வசம் மயங்கி இருக்கும் பொழுது மற்ற முனிவர்கள் எல்லாம் எந்த மூலை?'' என்றார்.

நாராயணன் நாரதரைப் பார்த்து "முனிவரே, நீங்களும் ஓர் அழகான பெண்ணை விவாகம் செய்து கொள்வது தானே?'' என்றார்.

நாரதர் பரிகாசமாக சிரித்துவிட்டு "ஹும், நானா? ஒரு நாளும் முடியாது. எனக்கு பெண்களிடம் ஆசையே இல்லை. நான் முற்றிலும் துறந்தவன். மற்ற ரிஷிகளைப் போல் என்னையும் நினைத்துக் கொண்டீர்களா?'' என்றார்.

பகவான் சிரித்துவிட்டு "உண்மை தான். உமக்கு ஸம்ஸாரத்தில் ஆசையே இல்லை. நீர் மற்ற ரிஷிகளைவிட இவ்விஷயத்தில் உயர்ந்தவர் தான்'' என்றார்.

நாரதரின் கர்வம் இன்னும் தலை தூக்கியது. அவர் மற்ற தேவர்களிடமும் ரிஷிகளிடமும் இதைப் பறை சாற்றினார்.

நாரதர் சென்றவுடன் மஹா விஷ்ணு மன்மதனைக் கூப்பிட்டு "மன்மதா, நீ பெண் வேஷம் தரித்து எப்படியாவது நாரதரை மயக்கிவிடவேண்டும்'' என்றார்.

மன்மதன் பயத்துடன், "ஸ்வாமி, நான் பெண் வேஷம் பூண்டு நாரதரை மயக்கிவிடுவேன். ஆனால் அவர் என்னை சபித்து விட்டால் என்ன செய்வது?'' என்றான்.

விஷ்ணு "உன்னை நான் காப்பாற்றுகிறேன்'' என்றார்.

ஒரு நாள் மழை 'சோ' என்று கொட்டியது. நாரதர் ஆஸ்ரமத்திற்குள் உட்கார்ந்து வீணை வாசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஆஸ்ரம வாசலில் சலங்கை சப்தம் கேட்டது. நாரதர் வெளியே வந்து பார்த்தார். அங்கே ஒரு அழகிய பெண் மழைக்கஞ்சி ஒதுங்கியிருந்தாள். நாரதர் அவளை கண்டு இரக்கம் கொண்டு, அவளை உள்ளே வந்து தங்கும்படி ஆக்ஞாபித்தார். அவளும் வெட்கத்துடன் உள்ளே சென்றாள்.

நாரதர் மறுபடியும் வீணையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். அப்பெண் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். வீணை வாசிப்பதைக்கேட்டு அவள் ரஸிக்காதது கண்டு, நாரதர் ஆச்சரியமடைந்து, "பெண்ணே'' நான் வீணை வாசிப்பது எப்படி இருக்கிறது? என்றார்.

அவளோ அகம்பாவத்துடன்'' இதைவிட நான் நன்றாய் வாசிப்பேன், நான் வாசித்தால் மழை கூட நின்று விடும்'' என்றாள்.

நாரதர் ஆச்சரியத்தோடு வீணையை அவளிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார். அப்பெண் வீணையை மீட்டினாள். நாரதர் மனம் உருகும்படி அவ்வளவு நன்றாக இருந்தது வீணையின் நாதம். மழையும் நின்றுவிட்டது. நாரதர் அப்பெண் மேல் மோகம் கொண்டார். அவளது அழகிலும் வித்தையிலும் மயங்கினார். அப்பெண் வெளியே செல்ல எழுந்தாள். நாரதர் அவளை வழி மறித்து தன்னை விவாகம் செய்து கொள்ளும்படி வேண்டினார். அப்பெண் "முனிசிரேஷ்டரே! நீங்கள் என்னைத் தோளில் சுமந்து, இந்த ஆஸ்ரமத்தை மூன்று முறை பிரதக்ஷிணம் செய்தால் நான் உங்களை விவாகம் செய்து கொள்கிறேன்'' என்றாள்.

நாரதரும் சம்மதித்து அவளைத் தோளில் சுமந்து ஆஸ்ரமத்தை மும்முறை பிரதக்ஷிணம் செய்து, சிரமத்தோடு, "அம்மாடா போதுமா? இனிமேல் என்னை கலியாணம் செய்து கொள்ளுகிறாயா'' என்று சொல்லியபடியே அவளை கீழே இறக்கினார்.

"அப்படியே கல்யாணம் செய்து கொள்கிறேன் ஸ்வாமி'' என்று சொல்லியபடியே மன்மதன் சிரித்துக்கொண்டு அவரெதிரில் காக்ஷியளித்தான். இந்த எதிர்பாராத காட்சியை கண்டு நாரதர் திடுக்கிட்டார். இது மன்மதனின் சூழ்ச்சி எனக் கண்டு கோபமும் வெட்கமும் அடைந்தார். உடனே "ஹா பாவி'' என்று சொல்லி அவனை சபிக்க எண்ணினார். உடனே மஹாவிஷ்ணு ப்ரசன்னமாகி "நாரதரே, வீணாகக் கோபம் கொள்ளாதீர். நீர் என்னிடம் கர்வத்துடன் பேசினீர். நீர் தான் நித்ய பிர்மசாரி என்று மற்ற ரிஷிகளை பழித்தீர். உம்முடைய கர்வத்தை அடக்கவே நான் மன்மதன் மூலமாக இந்த சூழ்ச்சியைச் செய்தேன். இனி கர்வத்தை விடும். பிறரை பழிக்காமல் உம்முடைய கர்மத்தில் கவனம் செலுத்தும்'' என்றும் கூறினார்.

நாரதர் நாராயணனைப் பணிந்து, தான் எனும் கர்வத்தை ஒழித்தார். உலகம் போற்றும் உன்னத ரிஷியாகவும் விளங்கினார்.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்,'' நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343

தமிழ் நூல்கள்

லோகமான்ய திலகா	0	8
குழந்தைக்கட்டி	1	4
உலகாகசியம்	1	0
உசலாம்பிகை	2	4
இரஞ்சிதமாலா	0	-
ஜகஜ்ஜாலன்	1	12

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொதுமக்களுக்கு அளிக்கப்படுகின்றன



"லண்டன் நியூ கோல்டால்'' இப்பொழுது புதிதாக கண்டு பிடிக்கப்பட்டவை இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம்- இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகி விட்டதால். இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமில்லை பொதுமக்களும் பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள் இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாறாமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகளை செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோலா "லண்டன் நியூ கோல்ட்'' 2 ஜதை வளையல்கள் 2 ஜதை தோடுகள் 2 மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள், சாம்பிளாக அனுப்பப்படும் இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத்தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக் இனும்.

London Commercial Co.,

(EAB) Post Box 165, (S.M.M.) LAHORE (India)

விசாலத்தின் விம்மல்

சிறு கதை

★

கே. எஸ். ராஜம் எழுதியது

வைத்தியக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும் போதே சாம்பசிவனுக்குக் கல்யாணமாகிவிட்டது. அப்போது அவனுக்கு வயது இருபது. கல்யாணமான மூன்று வருஷங்களுக்குள் அவன் விசாலத்துக்குத்தகப்பனுகிவிட்டான். விசாலம் பிறந்ததும் அவன் படிப்பும் முடிந்து திருச்சியில் சர்க்கார் ஆஸ்பத்திரியில் நல்ல சம்பளத்தில் உதவி டாக்டர் வேலேயும் கிடைத்து விட்டதால் அவன் ஒரு குதூகல புருஷனுகிவிட்டான். சாம்பசிவனுக்கு விசாலம் என்ருல் உயிர். எல்லா அதிர்ஷ்டத்தையும் கொண்டுவந்த அந்த பாக்ய லக்ஷ்மியிடம் அவனுக்கு அலாதி வாஞ்சை.

அவன்மனேவி சாரதா ரொம்ப நல்ல பெண். நல்ல அழகியும் கூட. யாரிடமும் மட்டு மரியாதையுடன் பதவிசாய் இருப்பாள். கணவன் முகம் கோணுமல்நடக்கும் சுபாவமுடையவள். சாம்பசிவன் தனக்கு வாய்த்த மனேவியையும், அருமைக் குழந்தை விசாலத்தையும் நினேத்து நினேத்துப் பூரித்துப் போனுன். ஆனுல் இந்த அற்ப ஆனந்தத்தை அவனுடன் சாரதாவும் அனுபவிப்பது உலகத்திற்கு மனசாகவில்லே.

சாம்பசிவன் ஒரு நாள் காலே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பிக்கொண்டிருக்கும் போது சாரதா அவனிடம் வந்து "குமாயில் குளித்துக் குளித்து அலுத்துப்போய்விட்டது. அடுத்தாத்து அம்மாமியோடு காவேரிக்குப் போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வரட்டுமா? என்று மிகவும் பணிவுடன் கேட்டாள்.

"அதுக்கென்ன, ஜாக்கிரதையாகப் போய்விட்டு வா" என்று சாம்பசிவன் சொன்னுன். சாரதாவும் அளவில்லா ஆனந்தத்தோடு காவேரிக்குப் போய் வேண்டிய மட்டும் அமிழ்ந்து ஸ்நானம் செய்து விட்டு வந்தாள். ஆனுல்...அன்று மத்தியானமே, "தலேயை ரொம்ப கனக்கிறதே" என்று சொல்லிப் படுத்துக் கொண்டாள். அவ்வளவு தான்; அது 'நிமோனியா' 'டபிள் நிமோனியா' என்று நிமிஷத்துக்கு நிமிஷம் பயங்கரமாகிக் கொண்டே வந்தது.

சாம்பசிவன் அவள் நிலேமையைப் பார்த்துவிட்டு துடித்துப் போய்விட்டான். அவன் தனக்குத் தெரிந்த வைத்திய ஞானத்தையெல்லாம் பிரயோகித்துப் பார்த்தான். விதியின் கூத்து மருந்துக்கு மசியவில்லே. சாயங்காலம் ஆவதற்குள் சாரதாவின் முடிவு நெருங்கும் சின்னங்கள் தோன்றவாரம்பித்தன. கணவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே, "குழந்தையை உங்களிடம் ஒப்படைச்சுட்டுப் போறேன்.........அவள் கண்ணேக் கசக்கிண்டு நிற்காமல் பார்த்துக் கொள்ளுங்கோ.........பகவான் இருக்கார்......" என்று கம்மின குரலில் சொல்லிவிட்டுக் கண்ணே மூடினுள் சாரதா.

பக்கத்தில் இரண்டு வயதுக் குழந்தை விசாலம் பழைய புடவையால் கட்டப்பட்டிருந்த 'தூளியில் நிர்விசாரமாய்த் தூங்கிக்கொண்டிருந்தது.

சாம்பசிவன் குழந்தையையும், மனேவியின் பிரேதத்தையும் மாறி மாறிப் பார்த்து விம்மியழுதான்.

* * * *

சாம்பசிவனிடம் உயிருக்கு உயிராக இருந்தாள் சாரதா. அவனுக்கும் அப்படித்தான். தம்பதிகள் இருவரும் மிக ஒற்றுமை. அவன் வெளியில் போய் விட்டு உள்ளே நுழையும் போதே தன் புன்னகையால் சாரதா அவன் ஆயாசத்தைப் போக்குவாள். இந்தச் சதிபதிகள் தனித்து நின்று பேசுவதே, பார்ப்பதற்கு கண் குளிர இருக்கும். இப்படியெல்லாம் இருந்துவிட்டுத் திடீரென்று சாரதாவைப் பிரிந்ததும் சாம்பசிவனுல் சகிக்க முடியவில்லே. அவன் பித்துப் பிடித்தவன் போல் ஆகிவிட்டான்.

அவனுக்கு, வாழ்க்கையில் இப்பொழுது நம்பிக்கை ஊட்டி நிற்பது அந்தச்சிறு குழந்தை விசாலம் தான். சாரதா போன பிறகு, விரிசல் விழுந்த குடத்தை ஒட்டிவைத்திருப்பது போல அவன் காலம் கழிக்கும்போது, அந்தக் குழந்தை தன்னுடைய மழலேச் சொற்களால் அவனுக்கு வாழ்க்கையில் ருசியைக் காட்டியது. அம்மாவையே நினேத்து ஏங்கும் விசாலத்தை ஆதரவுடன் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சாம்பசிவனின் தலேயில் விழுந்தது. அடிக்கடி மாற்றலாகக் கூடிய டாக்டர் வேலே அவனுக்குப் பெரிய ஹிம்ஸையாயிருந்தது. அவனே சிறுபிள்ளே. தனியாக ஒரு குழந்தையை வைத்துக்கொண்டு கஷ்டப்பட முடியவில்லே. அவனுக்கு அப்பா, அம்மா, போய் ஒரு வருஷத்துக்கு மேலாகிறது. நெருங்கிய பந்து என்று சொல்லக்கூடிய மாமா வீட்டிற்கு தாயில்லாக் குழந்தையுடன் போக அவன் விரும்பவில்லே.

இந்த நெருக்கடியில், கல்யாண யோசனே ஏற்பட்டது. அடுத்த சித்திரையிலேயே நீலாவுக்கும் சாம்பசிவனுக்கும் கல்யாணம் ஆயிற்று. தாலி கட்டின இரண்டாம் நாளே, சாம்பசிவன் மனேவியையும் விசாலத்தையும் அழைத்துக் கொண்டு மதுரைக்குப் போய் விட்டான்.

* * * *

நீலா புக்ககம் வந்ததும் வெகு அடக்க ஒடுக்கமாகவே நடந்து கொண்டாள். விசாலத்துக்கும் சாம்புவுக்கும் அவள் மீது அபார பிரேமை உண்டாகிவிட்டது. விசாலத்திடம் நீலா ரொம்பப் பற்றுதலாய் இருந்தாள். அதில் சாம்பசிவனுக்குப் பரம திருப்தி.

இந்த ரீதியில் கொஞ்ச நாடகள் ஓடின.

மூன்று வருஷங்களுக்குப் பிறகு நீல கர்ப்பந்தரித்தாள். தான் ஒரு ஜீவனுக்குத் தாயாகப் போகிறோம் என்று தெரிந்த நாள் முதலே நீலாவின் நடத்தையும் ஒரு விதமாக மாறிவிட்டது. அவள் சாம்பசிவனிடம் உதாசீனமாக இருக்கத் தலேப்பட்டாள். விசாலத்திடம் அவளுக்குப் பிரியமில்லே. முன்போல் அவளே விரும்பவுமில்லே. அவளோடு அதிகம் பேசுவதும் கிடையாது.

அழுக்கிலிருந்து அபாயம் எங்கும் இருக்கிறது!

ஆரோக்ய ஸோப்பான லைப்பாயினுல் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள குழந்தைகளுக்குப் போதியுங்கள்

குழந்தைகளும் அழுக்கும் பிரிக்கமுடியாதவைகளாக இருப்பதைப் போல தெரிகிறது. அப்படியில்லேயா? அவர்கள் பூனே விளேயாட்டோ, அல்லது தாவிக் குதித்தோ, அல்லது வெறுமனே புத்தகத்தை வைத்துக் கொண்டு சூழ உட்கார்ந்து கொண்டிருந்தாலும், எப்படியோ அவர்களுடைய கைகளும் முழங்கால்களும், முகங்களும் அழுக்கை இழுத்துக் கொள்கின்றன!
இந்த அழுக்கில் அபாயமிருக்கிறது. அழுக்கிலுள்ள கிருமிகள் தொத்து வியாதியைப் பரவச் செய்யவும், நோய்க்குக் காரண மாகவும் இருக்கின்றன என்பதை உங்கள் டாக்டர் சொல்லுவார். அதனுல்தான் லேப்பாய் முறை அவ்வளவு முக்கியம்.
முறை தவருமல் லேப்பாயினுல் சுத்தி செய்து கொள்வது அழுக்கிலுள்ள கிருமிகளிலிருந்து தடுத்துக் கொள்ளலாம். எப்படியெனில் லேப்பாய் கிருமி நாசன சக்திவாய்ந்தது. ஆரோக்யத்தைப் பாதுகாக்க வல்ல வஸ்துவைப் பிரத்யேகமாய்க் கொண்டுள்ளது. விவேகமுள்ள தாயார் தனது குழந்தைகளுக்கு லேப்பாய் முறையைப் போதிக்கிருளாகையால் அழுக்கு அபாயத்தைப்பற்றி ஒரு போதும் சஞ்சலப் பட வேண்டிய அவஸ்யமில்லே.

ஒரு நல்ல ஸோப்பைக்காட்டிலும் சிறந்தது லைப்பாய் அது ஒரு நல்ல வழக்கம்

L. 36-169 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

மாணவர்கள் நடித்த நாடகம்



மதுரை ஐக்கிய கிருஸ்துவ பாடசாலே மாணவர்கள் 'காளப்பன்' என்ற நாடகத்தை நடித்தனர்.

நீலாவின் குழந்தை பாலு பிறந்து ஒரு வருஷமாகி விட்டது. குழந்தை நன்ருக நடந்தான். முத்து போல் இரண்டொரு வார்த்தைகளும் வந்திருக்கின்றன. நீலா இந்த உலகத்தையே மறந்து குழந்தையை வைத்துக் கொஞ்சுவதிலேயே பொழுது போக்கினுள். சாம்பசிவனுக்கு வேளா வேளேயில் சமைத்துப் போடுவதில்லே, வீட்டு வேலேகளேயும் சரியாகச் செய்வதில்லே. விசாலத்தை அவள் வயசுக்குச் செய்ய முடியாத காரியங்களேயெல்லாம் செய்யச் சொன்னுள்.

சாம்பசிவனுக்கு இந்த வைபவங்கள் தெரியாமலில்லே. இளேயாள் கல்யாணம் செய்துகொண்டால், விசாலத்தின் கஷ்டம் நிவாரணமாகிவிடும் என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்த அவனுடைய எண்ணத்தில் மண்விழுந்தது. மனேவியோ நாளுக்கு நாள் ராக்ஷஸியாகிக் கொண்டு வந்தாள. நீலா அவ்வளவு தூரம் மாறிவிடுவாள் என்று சாம்பு கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லே.

சித்தீ சொல்லும் வார்த்தைகளேத் தட்டாமல் அவளுக்கு வேண்டியதை யெல்லாம் விசாலம் செய்வாள், அவள் இஷ்டப்படியேதான் நடப்பாள். இருந்தாலும் நீலாவுக்குத் திருப்தி என்பது ஏற்படாது. அவளுக்கு விசாலத்தைக் கட்டோடு பிடிக்கவில்லே. ஒரு வேலேக்காரியைக் காட்டிலும் நிஷித்தமாக அவளே நடத்தினுள். சாம்பசிவன் இல்லாத சமயங்களில் விசாலத்தின் தலேயில் 'நறுக்' என்று குட்டி கன்னம் சிவக்க நிமிண்டுவாள்.

இந்த அநியாயத்தை சாம்பு ஒரு தரம், நேருக்கு நேராய் பார்க்க நேர்ந்துவிட்டது. அப்பொழுது அவன், "ஈஸ்வரா! ஏழு வயதுக் குழந்தைக்கு இத்தனே தண்டனேயா?" என்று எண்ணி மனம் பொருமினுன். இருந்தாலும் நீலாவை நேரில் கடிந்து கொள்ள அவனுக்குத் தைரியமில்லே. மௌனமாகத் தன் குழந்தையின் துர்ப்பாக்கியத்தை நினேத்து நினேத்து ஏங்கினுன்.

விசாலத்தின் மேல் சாம்பசிவனுக்கு எல்லே கடந்த பாசம். அவளுடைய காலில் முள் தைத்தால் அவன் கண்களில் தைத்ததுபோலிருந்தது அவனுக்கு. ஆனுல் பாலுவிடம் அவ்வளவு வாஞ்சையுடன் அவன் இருந்ததாகச்சொல்லமுடியாது. இந்தக் காரணத்தினுல் பொருமை அக்னி நீலாவின் ஹிருதயத்தில் தஹித்துக்கொண்டிருந்தது. ஆனுல் சாம்புவின் முன்னுல் அவள் ரொம்ப நாஸுக்காக நடிப்பாள். விசாலத்தை வைத்துக்கொண்டு கொஞ்சுவது போல பாசாங்கு செய்வாள்.

ஒரு நாள் சாயங்காலம் சாம்பசிவன் ஆஸ்பத்திரியிலிருந்து வந்தவுடன் விசாலத்தை அழைத்துக்கொண்டு உலாவப் போனுன். போகிற வழியில், "கண்ணு! சித்தீ நோக்கு பக்ஷணம் குடுத்தாளோ?" என்று பரிவுடன் கேட்டான்.

"உம்...ஹூம்...நேக்கு பக்ஷணம் புடிக்கல்லேப்பா...காப்பி சாப்படறபோது சித்தி வந்து... என்னே மொளச்சு மூணு இலே விடறத்துக்குள்ளே அம்மாவை உருட்டிட்டு நிக்கறியோன்னே, நீ இன்னும் என்னல்லாம் பண்ணப் போறியோ"ன்னு வசாப்பா என்று சொல்லி விசாலம் அவனே நோக்கினுள்.

ஆழ்ந்த மனுவேதனே ஜொலித்துக்கொண்டிருக்கும் தன் புத்திரியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் சாம்பசிவன். அவன் மனதில் 'பகீர்' என்றது. அவன் ஹிருதயம் அப்படியே தூள் தூளாய் வெடித்து விடும்போல் ஆகிவிட்டது. தன் குழப்பத்தை வெளியில் காட்டாமல் கஷ்டப்பட்டு அடக்க முயற்சித்துக் கொண்டு, குழந்தையைத் தேற்றினுள் 'உன்னே சாரதா ஹாஸ்டலிலேசேத்தூடரேண்டி கண்ணு" என்று சமாதானம் செய்த போது அவன் குரல் சிதைந்து போயிற்று.

விசாலத்தைக் காலதாமதமில்லாமல் ஒரு ஹாஸ்டலில் சேர்த்துவிட வேண்டுமென்று அவன் மனம் துடியாய்த் துடித்தது. நீலாவின் மேல் உண்டான கோபத்தைப் பல்லேக் கடித்துக் கொண்டு அடக்கிக் கொண்டான்.

* * * *

மறு நாளே எக்ஸ்டென்ஷனில் இருக்கும் "சாரதா பாடசாலா"வுக்குப் போய் விசாரித்துவிட்டு வந்தான். அங்கே ஐந்து வயதுக் குழந்தைகள்கூட ஹாஸ்டலில் வசிப்பதைப் பார்த்து ஒருவாறு ஆறுதல் அடைந்தான்.

ஒரு நல்ல நாளில் விசாலம் ஹாஸ்டலுக்குப் போய்ச் சேர்ந்தாள்.

* * *

விசாலம் போனது முதல்சாம்பசிவனுக்கு வீடே சூன்யமாகத் தோன்றியது. குத்து விளக்கைப் போல் அவன் மனதைப் பிரகாசிக்கச் செய்து கொண்டிருந்தாள் விசாலம். நீலாவாலும், பாலுவாலும் அந்தப் பிரகாசத்தை சிருஷ்டிக்க முடியுமா? மனதில் நிம்மதியில்லாமல் சாம்பசிவன் ஏதோ ஒப்புக்காக வளேய வந்தான்.

விசாலத்துக்கு நல்ல காலம் பிறந்து விட்டதே யென்று நீலாவுக்கு மனத் தாங்கல். அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கணவனிடம் வெளியிட்டாள். "அந்தக் குட்டியை எங்கேயோ அனுப்பிச்சுட்டேளே; குழந்தையை வச்சிண்டு என்னுல் என்ன காரியம் செய்ய முடியும்? அந்தப் பொண்ணு இங்கே இருந்தால் எனக்கு ஏதாவது ஒத்தாசை பண்ணுமே; அதுகூட உங்களுக்கு இஷ்டமில்லேயாக்கும்..." என்று சாம்பசிவனிடம் சொன்னுள்.

அவன் அவளே ஒரு தரம் வெறுப்புடன் நோக்கிவிட்டு, வேதனே தோய்ந்த குரலில் சொன்னுன்: "போருமே, உன் அழகு. உன்னிடம் அவள் இருந்தால் உருப்பட்ட மாதிரிதான். சின்னக் குழந்தை என்ன காரியம் பண்ணும்." என்ருன்.

நீலா இதைக்கேட்டு வாயடைத்துப் போய் விட்டாள். இந்த வார்த்தைகளால் கணவனுக்குத் தன்மீது வெறுப்பும், திரஸ்காரமும் ஏற்பட்டிருப்பதை அவள் உணர்ந்தாள்.

நாட்கள் செல்லச் செல்ல, சுக துக்கங்கள் உறைத்த பின்னர், சாம்பசிவனுக்கு நெஞ்சில் தைர்யம் ஏற்பட்டது. நீலாவை அவ்வப்போது கடிந்து, அவளுடைய அகங்காரத்தையும் அகுயையும் குலேத்துக்கொண்டே வந்தான். அவனுக்கு வாழ்க்கையில் இப்பொழுது சந்தோஷமுமில்லே, துக்கமுமில்லே.

அடிக்கடி விசாலத்தை ஹாஸ்டலில் போய்ப் பார்த்துவிட்டு வருவான். அங்கே குழந்தை சந்தோஷமாகமேயிருந்தாள்.

குழந்தை பாலுவும் நீலாவின் செல்லத்தினிடையே வளர்ந்து வந்தான். அவனுக்கு இப்பொழுது நான்கு பிராயம். கண்ணுக்கு நல்ல லக்ஷணமாய் ஒரு கவர்ச்சியோடு இருந்தான். விசாலம் இல்லாத சமயங்களில் சாம்பசிவன் பாலுவின் அழகை மிக ஆர்வத்துடன் அநுபவித்து மகிழ்வான். ஆனுல் வாய்விட்டு குழந்தையோடு கல கலப்பாய்ப் பேசமாட்டான். இருந்தும் வேண்டிய பொம்மைகளேயும், பக்ஷணங்களேயும் வாங்கிக் கொண்டு வருவான். பாலுவும் 'அப்பா' என்று சாம்பசிவனிடம் ஒட்டுதலாய் இருக்கமாட்டான், அவனுக்கு அம்மாவைத் தான் தெரியும். சாம்பசிவனேக் கண்டால் 'குடு குடு' வென்று நீலாவிடம் ஓடி விடுவான்.

* * * *

ஒரு வருஷம் கோடைவிடுமுறைக்கு விசாலம் வீட்டிற்கு வந்திருந்தாள், சாம்பசிவன் விசாலத்தைக் கண்டவுடன் ஆனந்த சாகரத்தில் மிதந்தான்

(13-ம் பக்கம் பார்க்க)

இ ஞ ம்

"அமெரிக்கன் நியூ கோல்ட்" அற்புத தயாரிப்பு. உண்மையில் உலகில் 8-வது அதிசயம். இனி பிரபலப்படுத்த வேண்டிய அவசியமில்லே. ஏற்கனவேயே இந்தியா பூராவும் பிரபலமாய்விட்டது. நிறம் மாறமலிருப்பதற்கு பத்திரிகைகளாலும், பொதுமக்களாலும் புகழப்பட்டது. நாகரீகமான நகைகளும் செய்யலாம்.

எமது "அமெரிக்கன் நியூ கோல்டை" மேலும் பிரபலப்படுத்த தாற்காலிகமாக 6 தோலா அமெரிக்கன் நியூ கோல்ட், 2 ஜதை வசீகரமான கை வளேயல்கள், 2 மோதிரம் சாம்பிள் செட்டாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். இந்த அனுகூலத்தை நிறுத்துவதற்கு முன் முந்துங்கள்.

இலவசம்: பூரா விவரங்களுடன் கூடிய படங்களுள்ள காட்லாக் இலவசம்.

American New Gold Company,
Post Box 61, (S. M. M.) LAHORE.

(E A B)

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள்

★

(1762—1827)

★

"நீலம்"

★

ஸ்ரீ தியாகப் பிரும்மம் பக்தி ததும்பப் பாடிப் பரவசமடைந்தது இந்த ஜில்லாவில்தான். ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் அவதரித்த ஜில்லாவும் இதுவே தான். சங்கீத வித்வான்கள் எல்லோருக்கும் ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் சில க்ருதிகளாவது தெரியும்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் தேவி அருள் பெற்றவர். அம்பிகையின் கடாக்ஷத்தால் அதியற்புதமான க்ருதிகளைச் செய்தருளியிருக்கிறார். அவர் மொத்தம் எவ்வளவு க்ருதிகளைச் செய்தார் என்பது பற்றித் திட்டமாகத் தகவல்கள் இல்லை. சிரமப்பட்டுத் தேடிப் பிடித்தால் கிட்டத் தட்ட 200, 300 க்ருதிகளைச் சேகரிக்கலாமென்று சங்கீத வித்வான்கள் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் காலமாகி இன்று சுமார் 116 வருஷங்களாகி விட்டன. அவரது பெருமைபற்றி பற்பல கதைகளையெல்லாம் நாம் சொல்லக் கேட்கிறோம்.

"கம்பீரமான தோற்றம். வசீகர முகம். எப்போதும் இடுப்பில் சரிகை வேஷ்டி. நெற்றியில் குங்குமப் பொட்டு. காதில் கமலக் கம்மல். கழுத்தில் ருத்திராட்ச மாலை. தோட்களில் சால்வை. கையில் வெள்ளிப்பூண் கட்டிய "வாக்கிங் ஸ்டிக்" இவ்வளவு அலங்காரத்துடன் ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் வெளிக்கிளம்புவாராம். இந்தக் கோலத்துடன் அவர் தெருவில் வந்தால் ஜனங்கள் அவரைத் தரிசிக்க ரஸ்தாவின் ஓரங்களில் ஒதுங்கி அணி வகுத்து நிற்பார்களாம்! திண்ணைகளில் உட்கார்ந்திருப்பவர்கள் எழுந்து நிற்பர். கலைஞானத்தினால் அடைந்த புகழ்மட்டுமின்றி சுதாவாகவே அவரிடம் எல்லாருக்கும்



ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் (க்ருதிகள் இயற்றியவரின் கொள்ளுப்பேரன்)

பல சிறந்த அறிவாளிகளையும் கலைஞர்களையும் ஈன்றெடுத்த பெருமை தஞ்சைக்கு உண்டு. தன் தேவையை பூர்த்தி செய்து கொள்வதுடன் தேவையுள்ள இதர இடங்களுக்கும் ஏராளமாக நெல் சப்ளை செய்வதால் தஞ்சை ஜில்லாவுக்கு "நெற் களஞ்சியம்" என்று பெயரிட்டார்கள். உள்ளத்தைக் குளிர வைக்கும்படியாகக் கானம் பயின்ற உத்தம வித்வான்கள் உதித்த ஜில்லாவும் தஞ்சைதான். எனவே தஞ்சை ஜில்லாவுக்குச் "சங்கீதக் களஞ்சியம்" என்று சொல்வதும் பொருந்தும். தான் மட்டும் அனுபவிக்காமல் மாகாணத்திலுள்ள சகல ரஸிகர்களுமே அனுபவிக்கும்படியான க்ருதிகளைச் செய்த பெரியார்கள் தோன்றிய ஜில்லா.

★

தனி மதிப்புண்டு. அவருடைய வாழ்க்கையின் சில அம்சங்கள் வருமாறு:—

வாழ்க்கை வரலாறு

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் 1762-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 26-ந் தேதியன்று திருவாரூர் க்ஷேத்திரத்தில் உதித்தார். தந்தையின் பெயர் ஸ்ரீ விச்வநாதய்யர்; தாத்தாவின் பெயர் ஸ்ரீ வெங்கடாத்திரி அய்யர். இவர் வடமபிராமண மரபைச் சேர்ந்தவர். ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் கிருத்திகை நட்சத்திரத்தில் தோன்றினமையால் அவருக்கு வெங்கட சுப்பிரமண்யம் என்று சர்மன். 'சியாம கிருஷ்ணன்' என்று செல்லமாகக் கூப்பிடுவார்களாம். இவரது சங்கீத ஞானம் பாரம்பர்யமா வந்ததென்று சொல்ல முடியாது. ஸ்ரீ சரஸ்வதி தேவியின் அருளால் அவருக்கு அதில் பாண்டித்தியமேற்பட்டதென்று கூறுவர்.

பாலப் பருவத்திலேயே சாஸ்திரிகள் பாஷைப் பயிற்சியில் தேர்ச்சியுற்றார். ஸம்ஸ்கிருதத்திலும், தெலுங்கிலும் விசேஷப் பாண்டித்தியம். தமது மாமாவிடம் சங்கீதம் அப்பியஸித்தார். 18-வது வயதில் தாய் தந்தையருடன் தஞ்சை வந்தார்.

சங்கீதப் பயிற்சி

தஞ்சையில் தங்கியிருந்த போது ஸங்கீத ஸ்வாமிகள் என்ற பெரியார் அங்கு வந்து சேர்ந்தார். ஸ்ரீ சியாமா சாஸ்திரியார் ஸங்கீத ஸ்வாமிகளை தமது இல்லத்திற்கு பிக்ஷை கொள்வதற்காக அழைத்தார். ஸ்வாமிகளும் அங்கு சென்று பிக்ஷை கொண்டார். அச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீ சியாமா சாஸ்திரியாருக்கு உண்மையான ஸங்கீதத்தின் உட்கருத்துக்களையும், லய விஷயமான நுட்பங்களையும் உபதேசித்தார். ஸங்கீத ஸ்வாமிகள் சங்கீதத்திலும், பரதத்திலும் சமர்த்தர். தினந்தோறும் ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் அவரிடம் சென்று பாடங்கற்றார். ஸ்வாமிகள் தஞ்சையை விட்டு புறப்படுகையில் ஸ்ரீ சாஸ்திரியாரையழைத்து அவரிடம் சில உயர்ந்த சங்கீத நூல்களைக் கொடுத்தார். பச்சிமிரியம் ஆதியப்பய்யர் பிரபல சங்கீத ஞானி. அவரது சங்கீதத்தை மட்டும் அடிக்கடி கேட்குமாறு ஸ்வாமிகள் தெரிவித்துப் போனார்.

ஸ்ரீ சாஸ்திரியாருக்கு ஆதியப்பய்யரிடம் தொடர்பேற்பட்டது. இருவருக்கும் பரஸ்பரம் அன்பு தழைத்தது. ஆதியப்பய்யர் வயதில் பெரியவர்; ஸ்ரீ சாஸ்திரியாரிடம் அவருக்கு பிரத்யேக அன்பு உண்டு. சீலம், தேவியிடம் கொண்ட பக்தி, சங்கீதத்தில் இருந்த திறமை இவை காரணமாக ஆதியப்பய்யருக்கு ஸ்ரீ சாஸ்திரியாரிடம் ஏற்பட்ட விச்வாசம் வரவரப் பெருகியது. "காமாக்ஷி" என்றே அழைப்பாராம். ஆதியப்பய்யரிடம் சாஸ்திரிகள் வருகிறார்கள் என்றால் அங்கிருக்கும் சிஷ்யர்களெல்லாம் மெதுவாக வெளியேறிவிடுவார்கள் என்று கூறப்படுகிறது. ஸ்ரீசாஸ்திரியாரின் க்ருதிகளின் அமைப்பு, அவரது ஸ்வரஜதிகளின் மேன்மை இவற்றைப் புகழாத வித்வான்களே இல்லை எனலாம்.

வெள்ளிக்கிழமைகளிலும் மற்றும் சில முக்கிய தினங்களிலும் அவர் காமாக்ஷியின் ஸந்நதியில் உட்கார்ந்து தியானம் செய்வார். பக்திமேலிட்டால் கண்களில் நீர் மல்க அநேகம் க்ருதிகளைப் பாடினார். ஆதலால் அவற்றிற்கு அலாதியான சொல் மணமும் பொருள் சுவையும்; இனிமையும் பொருந்தின.

க்ருதிகளை இயற்றிய ஸ்ரீ சியாமா சாஸ்திரியார்

'நவரத்ன மாலிகை'

தமது நண்பர் ஒருவர் விக்ஞாபித்துக் கொண்டதன் பேரில் ஒரு சமயம் புதுக்கோட்டை சென்றார். மதுரை மீனாக்ஷியை சாஸ்திரிகள் தரிசித்துவிட்டு வரவேண்டுமென்று அங்கு ஒரு அரிய நண்பரிடமிருந்து ஆக்ஞை பிறந்தது. சாஸ்திரிகளும் சென்றார். அங்கு போகும் மார்க்கத்தில் 9 க்ருதிகளைச் செய்தார். அவற்றைத் தான் இப்போது "நவரத்தின மாலிகை" என்று கூறுகிறார்கள். ஸ்ரீ மீனாட்சி ஸந்நிதியில் அவர் அவற்றைப் பாடினார்.

சம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஆகிய பாஷைகளில் அவரது க்ருதிகள் இருக்கின்றன. சில அபூர்வ ராகங்களுக்கு ஸ்ரீ. சாஸ்திரியாரின் க்ருதிகளே சிறந்த உதாரணமாகவிருக்கின்றன. இது தவிர தாள விஷயமாக விரிவான சித்திர மெழுதியுள்ளார். அவற்றின் ஏட்டுப் பிரதிகள் இப்பொழுதும் இருக்கின்றன. உண்மையான சங்கீதத்தை உணர்ந்த இவ்வுத்தமருக்கு ஸ்ரீ காமாக்ஷி அடிக்கடி பிரஸன்னமாகி அனுக்ரகம் செய்தார். கணிதம், ஜோதிஷம், மந்த்ர சாஸ்திரம் ஆகியவற்றிலும் இவருக்கு விசேஷ ஞானமிருந்தது.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் 1827-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 6-ந் தேதியன்று பூதவுடல் நீக்கி புகழுடல் எய்தினார். காலமாவதற்கு 6 நாட்கள் முன்புதான அவரது தர்ம பத்தினி காலமானார். இவரது குமாரர் ஸ்ரீ சுப்பராய சாஸ்திரியாரும், பேரன் ஸ்ரீ அண்ணாஸ்வாமி சாஸ்திரியாரும் சங்கீதத்துறையிலேயே சேவைசெய்து புகழ் பெற்றனர். கடைசியாக இப்போது ஸ்ரீ சாஸ்திரிகளின் கொள்ளுப்பேரனான ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் தஞ்சையிலிருந்தார். இவர் தமது கொள்ளுப் பாட்டனாரின் க்ருதிகளைப்

(அடுத்த பக்கம் பாக்க)

நவநாகரீகம்

★

ஒரு மோதிரம்

★

"காசினி"

'லக்ஷ்மி போட்டிருந்த மோதிரத்தைப் பார்த்தாயோ?' என்று கமலி கேட்டாள்.

'அவள் யாரு லக்ஷ்மி?' என்றாள் நளினாதேவி.

'அதுதான் கிரஜா மாட்டுப் பெண் லக்ஷ்மி!' என்றாள் கமலி.

'கிரஜா மாட்டுப் பெண்ணுக்கு சங்கரின்னு பேர்; அவள் என்னி முதற் கொண்டு லக்ஷ்மி ஆனா?' என்று மாலினி கேட்டாள்.

'அவள் பிறந்தாத்துப் பேர் அது: கிரிஜா பிள்ளைக்கு நாராயணன் என்று பேரா; அவள் மாட்டுப் பெண்ணை லக்ஷிமி என்று கூப்பிடுகிறாள்!' என்று கமலி விஷயத்தை விளக்கினாள்.

'அந்தப்பெண்ணுக்கு இதற்குள் எத்தனை தரம் பிரக்கேறிக் கொண்டதோ? ஸஹஸ்ஸர நாமம் லக்ஷிமீனு சொல்லி இருப்பேள்போலிருக்கே?' என்றாள் சரோஜா.

'நாம் அவள் பேரைச் சொன்னால் அவளுக்கு எதுக்குப் பிரை ஏறணம்?' என்று கமலி கேட்டாள்.

'இது கூடவா ஒத்திக்குத் தெரியாது? நீ நம் தேசத்துப் பெண்தானே? ஏதாவது ஓட்டைக் கப்பலில் வந்து இறங்கினயா?' என்று சரோஜா பரிகாசம் செய்தாள்.

'அவளுக்குத்தெரியாதாக்கும்; யாரையாவது நினைத்துக்கொண்டால் அவர்களுக்குப் பிரைக் கேறும் என்று நம்மவருள் சொல்வது உண்டு. போரது, மோதிரம் என்ன தினுசு என்பதை நீ சொல்லலையே?' என்றாள் நளினாதேவி.

லக்ஷ்மி போட்டிருந்த மோதிரம் புதிய தினுசாக, அழகாக இருந்தது. ஒரு மிகவும் சிறிய ஐந்து இதழ்கள் உள்ள புஷ்பம் மாதிரியில் செய்திருந்தது. ஒவ்வொரு இதழுக்கும் ஆழ்ந்த, அதிகப் பளபளப்பில்லாத சிகப்பு இனமல் வர்ணம் பூசி இருந்தது. நடுவில் ஒரு மஞ்சள் நிறமான செயற்கைக் கல் பதித்திருந்தது. மோதிரம் கூலி ஏகப் பட்டது ஆச்சுது என்று லக்ஷ்மி சொன்னாள். ஆனால் தகும் என்று தான் சொல்லணும். நாசூக்காகவும், மிகவும் சிறியதாகவும் நேர்த்தியாகவும் இருந்தது

ஒரு 'ப்ராக்'

நகையிலிருந்து பேச்சுத் துணிமணிகளில் திரும்பியது.

'இப்போ ரஜ்ஜினிக்குத் தையல் பைத்தியம் நன்னா பிடிச்சிருக்கு; எப்போ பாத்தாலும் ஒரு சின்னச் சட்டத்தை வைத்துக் கொண்டு, ஏதோ தைச்சுக் கொண்டே இருக்காள்!' என்றாள் கமலி.

"ஆமாம்; ஆத்துக்காரர் காலையிலே ஆபீசுக்குப் போனா, ராத்திரி தான் வீட்டுக்கு வரார்; வீட்டிலோ குழந்தை குட்டி எதுவும் கிடையாது; போது தான் போகணமே இல்லையே? அண்ணா பெண்ணுக்கு, அங்கிச்சி பிள்ளைக்குனு ஏதாவது தைக்கிறாளாக்கும்?' என்றாள் லேடி சுந்திராசாரி.

'எப்பவும் தான் அவள் ஆத்துக்காரர் நேரங்கழித்து வீடு வருவார்; இது ஒன்னும் புதிசில்லையே? இவளும், ஏதாவது ஒரு நவீனத்தை வைத்துக் கொண்டு, சோபாவில் சாய்ந்த வண்ணம் அலுக்காமெ, சலிக்காமெ படிப்பாளே? ரஜ்ஜினி உபயோகமா, வணங்கி ஒரு வேலை செய்கிறாள் என்று கேட்க ஆச்சரியமாகத் தான் இருக்கு!' என்று பங்கஜத்தின் மாமியார் வெடுக்கென்று சொன்னாள்.

'அவள் இப்போ புதிசாக நிழல்-வேலை கத்துக் கொண்டிருக்காள். அதுதான் புதிசாமணியம் துரிசா நடக்கிறது!' என்றாள் கமலி.

'அது என்ன நிழல் வேலை? அப்புறம் வெயில் வேலை என்று கூட ஒண்ணிருக்கா?' என்று நளினாதேவி கேட்டாள்.

'இதற்கு இங்கிலீஷில் 'ஷாடோ' வேலை என்கிறார்கள்; சாயை வேலை என்கலாம். அதாவது பூக்களில் சாயை வெளியே தெரியும்!' என்றாள் கமலினி.

இந்த விதப் பூ வேலை கற்றுக் கொள்ளுவது சுலபம் தான். ஆனால், இதை மிகவும் ஒழுங்காகச் செய்ய வேண்டும். நேர்த்தியாக, இழை பின்னினாப்போல் தோன்றுவதோ இதன் அழகு என்கலாம். துணி சுருக்கம் கொடுக்காமல் தைக்க வாக்காக இருக்க வளைவுச் சட்டம், வர்ண நூல்கள் தேவை.

ஆர்கண்டீ, வாயில், ஜார்ஜெட் முதலிய மெல்லிய துணிகளிலேயே சாயைப் பூ வேலை செய்ய முடியும். பூக்கள், பறவைகள், மிருகங்கள்போல் இஷ்டப்படி முதலில் துணியின் மேல் சீராக வரைய வேண்டும். நேர்வையான வர்ண நூலில் வரைந்த வரியின் மேல், தைக்க வேண்டும். தையலை மிகவும் சிறியதாகவும், மாறி, மாறி இந்தப் பக்கம் ஒரு தையல், அந்தப் பக்கம் ஒரு தையலாகத் தைக்கணம்! அதாவது, பூ வரைந்த துணியை முதலில் சீராகச் சட்டத்தில் பொருத்த வேண்டும். பிறகு, வர்ண நூலில் இரண்டு நூலை ஒரு ஊசியில் கோத்து சித்திரத்தின் நடு உச்சியில் ஆரம்பிக்க வேண்டும். சாதாரணத் தையல் ஒன்று போட்டு பிறகு வலது பக்கமாக ஒரு தையல் போடணம். பிறகு முதல் தையலின் இடது பக்கம் இன்னொரு சிறு தையல் போடணம். மறுபடி வலது பக்கம் போடணம். தையலை நாம் சாதாரணத் தையல் தைப்பது போல் போடுவதில் வெளிப் பக்கம் ஊசியைக் குத்தாமல் உள் பக்கம் குத்தவேண்டும். இதனால் தையல் புள்ளி போல் சிறிதாக விழும். இப்படியே வரைந்த சித்திரத்தின் ஓரம் முழுக்க தைப்பதால், வர்ண நூல் உள் பக்கம், முழுவதும் நெய்தாற் போல படியும். சித்திரம் பார்வைக்கு, வேறு வர்ணத் துணியில் கத்தரித்துத் தைத்தாற்போலிருக்கும். இவ்விதம் கோழிகள், முயல்கள் பூக்கள் போட்ட ஒரு ஆர்கண்டி பிராக் தன் தமையன் பெண்ணுக்கு ரஜ்ஜினி தைத்திருந்தாள். மிகவும் நேர்த்தியாக இருந்தது.

(முன் பக்கத்தொடர்ச்சி)

பயின்றவர். இவர் சித்திரமெழுதுவதில் நிபுணர். க்ருதிகளை இயற்றிய ஸ்ரீ சாஸ்திரியாரின் படத்தை எழுதியவரும் இவர் தான். சமீபத்தில் தான் அவர் காலமானார்.

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவர் எந்த வகையில் அவற்றை அமைத்தாரோ அதை அப்படியே பாடியாக வேண்டும். கூட்டவோ குறைக்கவோ கூடாது. இல்லையாயின் அவற்றின் அழகு கெட்டுவிடும். அவ்வளவு திட்டமாக அவை உருப்படுத்தப்பட்டிருக்கின்றன. முதலில் அவற்றைக் கற்பது சிரமந்தான் என்கிறார்கள். லயகதியை ஆதாரமாகக் கொண்டு அக்கிருதிகளிருப்பதால் சற்று 'நெரடாக'த் தான் இருக்கும். சரிவர அவற்றைக் கற்றால் பாடுவதற்கும், கேட்பதற்கும் மிகவும் ரம்மியமாயிருக்கும். சியாமா சாஸ்திரிகளது ஸ்வரஜதிகள், வர்ணம், கிருதிகள் அனைத்தும் பளிங்குபோன்றவை. ராகபாவத்தின் முழு உருவையும் பிரதிபிம்பிக்கக் கூடியவை.

க்ருதிகளின் பரிபூர்ண அழகு

ஸ்ரீ சாஸ்திரியாரின் க்ருதிகளின் அழகு முழுவதையும் சிறந்த வீணை வித்வான்கள் வாசிக்கக் கேட்டால் நன்கு புலப்படும். அவரது கீர்த்தனைகள் லயகதியை ஒரு கட்டுப்பாட்டுக்கு வரும்படி செய்யுமேயன்றி சுகபாவத்துக்குத் தடையாகவிராது. அவற்றில் நாம் எவ்வித மாறுதலையும் செய்ய முடியாது. இதர கீர்த்தனைகளில் 'நிரவல்' செய்து பாடுவது போல் ஸ்ரீ சாஸ்திரியார் க்ருதிகளில் செய்வது சிரமம். ஏனெனில் அவற்றின் அமைப்பு அங்ஙனம் செய்யப்பட்டிருக்கிறது. அவரது கீர்த்தனைகளிலுள்ள 'கமகங்கள்' குலைந்தால் கீர்த்தனத்தின் கலை அமைப்பே கெட்டுவிடும். என்று ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் கீர்த்தனைகளையும் மற்றவர்களின் கீர்த்தனைகளையும் கேட்டானந்தித்த ரிடையர்டு "அக்கௌண்டென்ட் ஜெனரல் ஸ்ரீ ஸி. எஸ். அய்யர் தெரிவித்தார்.

"ஸ்ரீ த்யாகப் பிரும்மம் ஏராளமான வர்ணமெட்டுகளில் க்ருதிகளைச் செய்திருக்கிறார். ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதர் பௌராணிகர்; வைணிகர். ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் தேவி உபாஸனையின் காரணமாக சங்கீதத்தில் பெருமையடைந்தார். ராக எடுப்புகள், அதிலுள்ள அம்சங்கள் இவற்றையெல்லாம் லயகதியை அடிப்படையாகக் கொண்டு சித்தரித்த பெரியார். அவரை சங்கீதக் கலா ரஸிகர்கள் கொண்டாடுவது எவ்விதத்திலும் பொருந்தும்" என்று சென்னை சர்வகலாசாலை பிரதம கணித ஆசிரியர் டாக்டர் ஆர். வைத்திநாதஸ்வாமி அய்யர் கூறினார். ஸ்ரீ சாஸ்திரியாரின் உருப்படிகளைக் கேட்டு ரஸித்து அவற்றின் நுட்பங்களை நன்குணர்ந்தவர்களில் இவர் ஒருவர்.

இப்போது கிடைத்துள்ள வரை சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகளை 'மித்திரன்' வாரப் பதிப்பில் வெளியிட உத்தேசித்திருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

பொங்கல் பாட்டு

(ஸ்ரீ கி. வ. ஜகந்நாதன்)

★

அம்மாயி அம்மாயி
ஏண்டி ஏண்டி அம்மாயி
தையும் பிறந்தது
தரையும் குளிர்ந்தது
தை'மாதப் பெண்கள் எல்லாம்
தட்டாப் புறப்பட்டார்
கொட்டாப் புறப்பட்டார்
அம்மாயி அம்மாயி

★

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. உழுது பரம்படித்து விதை தெளித்துக் களை பிடுங்கி எரு விட்டுப் பாதுகாத்த பயிர்கள் விளைந்து முற்றி நிற்கின்றன. அவற்றை அறுவடை செய்து வீடு நிறையக் கொணர்ந்து வைத்து மகிழ்கிறான் குடியானவன்.

வாழ்வுக்கும் சாவுக்கும் தை மாதம் இனிமையை ஊட்டுகிறது. ஆம், கல்யாண நாள் தை முதல் தேதியில் தொடங்குகிறது. பழுத்து உலர்ந்து போன கிழங் கட்டைகள் எங்கே தம் உயிருக்குத் தக்ஷிணாயனத்திலேயே யமன் ஓலை அனுப்பி விடுவானோ வென்று உத்தராயணத்தை எதிர் பார்த்து நிற்கிறார்கள். பீஷ்மர் பாரத யுத்தத்தில் பட்டுக் கிடந்த பொழுது தை மாதப் பிறப்பை எதிர் நோக்கிப் போகிற உயிரைத் தாங்கி அம்புப் படுக்கையிலே தவம் புரிந்து கிடந்தாரென்று வாசிக்கிறோமே!

தைப் பொங்கல், நிறைவுக்கு அறிகுறி, பசியும் நோயும் பறந்து சென்றன வென்ற இன்பத்துக்கு அடையாள நாள். வீடெல்லாம் விளக்கிச் சுண்ணும்பும் செம்மண்ணும் இட்டு அழகு பண்ணுவது நம் நாட்டவர் வழக்கம். தேவர்களுடைய பகல் தை மாதத்திலே தொடங்குகிறது.

வேளாண்மையைச் செல்வமாகக் கொண்ட இந்த நாட்டிலே நெல்லும் கரும்பும் நிலத்துக்குப் பெருமை தருகின்றன. புலவர்களெல்லாம் நிலவளத்தைச் சொல்லும் பொழுது நெல்லையும் கரும்பையும் நிறைத்து வைக்கின்றனர். "நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்" என்று ஒருவர் பாடுகிறார்.

நிலவளம் படைத்த தமிழ் நாட்டில் நெல்லும் கரும்பும் நிறைந்த நாள் தைப் பொங்கல். புது நெல்லைக் குத்திய அரிசியையும், விளைந்த கரும்பை ஆலையிட்டுச் செய்த வெல்லத்தையும் கொண்டு பொங்கலிட்டுக் களிக்கிறான் தமிழன். அவனுடைய நிலம் வளம் பெற்றதென்பதை அந்தப் பொங்கல் சொல்லுகிறது. தன் நிலத்திலே விளைந்த நெல்லும் கரும்பும் தன் மனையிலே வளரும் பசுவின் பாலும் அவனது மனையிலும் மனத்திலும் இன்பப் பொங்கலை உண்டாக்குகின்றன.

அவன் பொங்கலைப் படைத்துச் சூரியனை வணங்குகின்றான். சூரியன் இல்லாவிட்டால் ஒளி ஏது? உயிர் ஏது? சந்திரனையும் சேர்த்து வழிபடுகிறான். பயிர் விளைவதற்குச் சந்திரனது அமுத கிரணங்கள் உதவுகின்றன. தமிழ் நாட்டு மகளிர் அவனை எருவிட்டு வழி படுதல் பழைய காலத்து மரபு.

சூரியனையும் சந்திரனையும் வணங்கும் இந்த வழக்கத்தைச் சிலப்பதிகாரமென்னும் அரிய தமிழ்க் காவியத்திலே காணலாம். ஒளியால் உலகை எழுப்பும் சூரியனும், தண்மையால் உலகுக்குச் சாந்தியைத் தரும் சந்திரனும் கண்கண்ட தெய்வங்கள்.

பொங்கற் புது நாளில் தமிழ் மக்கள் களி துளும்பும் முகத்துடன் கடவுளை வழி பட்டுப் பொங்கல் விருந்து நுகர்கிறார்கள். "பால் பொங்கிற்று?" என்று ஒருவரை ஒருவர் கேட்டுச் சந்தோஷம் அடைகிறார்கள். பாலாறு தேனாறுக வளஞ்சுரந்த பாரத நாட்டிலே இன்று பால பொங்க வழி இல்லை. இருக்கிற சொட்டுப்பாலும் காலக் கொடுமையால் தீய்ந்துபோய் விடுகிறது.

பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல். அன்று காலையில் பெண்கள் நீராடி விட்டு முதல் நாள் சமைத்த பொங்கலை மஞ்சள் இலையிலே காக்கைக்கு விருந்திட்டுத்தாமும் உண்கிறார்கள். இதைக் "கனு" என்று சொல்வார்கள். முதல் நாள் சமைத்த பொங்கல் நன்றாக ஊறிக் கனிந்து மறுநாள் பஞ்சாமிர்தம் போல இனிக்கிறது. இந்தக் 'கனிவுப் பொங்கலை'க் காக்கைக்கு இட்டுத் தாமும் உண்டு மகிழும் பெண்களின் முகத்திலே என்ன ஒளி! என்ன ஆனந்தம்!

வயல்களிலே வேலை செய்த பெண்களுக்கு இந்த இரண்டு நாளும் வேலை இல்லை; ஓய்வு. அவர்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து கும்மி அடிக்கிறார்கள். பழைய காலத்தில் அந்தக் கொண்டாட்டத்தை குரவை என்று சொல்வார்கள்.

நடுவிலே ஒரு பிரப்பங் கூடையை வைத்து விட்டு ஒவ்வொரு வீட்டுக்கு முன்னும் அவர்கள் சேர்ந்து பாடி கை தட்டிக் கும்மி அடித்து குதூகலிக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் அவர்களது கூடையில் அரிசிபோடுகிறார்கள்; வெல்லம் இடுகிறார்கள்.

அவர்கள் பாடும் பாட்டு, புலவன் இயற்றியதல்ல. அது ஒரு நாடோடிப் பாட்டு. அதில் எதுகை, மோனை, தளை விசேஷங்கள் இல்லை. ஆனு

(அடுத்த பக்கம் பார்க்க)

பாரதியார் : புதுவை நிகழ்ச்சிகள்

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

★

ஓர் நாள் மாலை ஐந்து மணிவாயிற் கதவு தட-தட வென்று தட்டப்பட்டது. எங்கள் வீட்டில் எல்லா வேலைகளுக்கும், காரியங்களுக்கும் சட்ட திட்டங்கள் வகுத்திருப்பார் அப்பா. அதன் படிதான் நடக்க வேண்டும். மீறினால் கடுந் தண்டனை விதிக்க பின்வாங்கார். யாரேனும் வந்தால் கதவைத்திறந்து யாரென்று பார்த்து, அவர்களைக் காலமலம்பச் சொல்லிவிட்டு நான் மாடிக்குப் போகவேண்டும். தந்தையார் மாடியிலிருப்பாரே தவிர அவர் மனம் கீழேதான் இருக்கும். நான் சிறுபெண் ஆனபடியால் எவனாவது வந்து கதவைத் தட்டி, தப்பிதம் ஏதாவது நேராமலிருக்க வேண்டுமே என்று அவர் கவலை. ஆனால் "அதற்காகப் பெண்களை உள்ளேயே வைத்திருப்பது" என்ற வழக்கம் பிரயோசனமில்லை என்ற கொள்கையுடையவரானபடியால், என்னையே கதவு திறக்க வேண்டும் என்பார். கதவுச் சங்கிலியைத் திறந்து பார்வையிலேயே அவர்கள் யார் என்பதை அறிந்து கொண்டு தெருவில் நடந்த புழுதியோடு மாடியேலுதபடி அவர் கால் அலம்பும்படி சொல்லி விட்டு, (இவ்வளவும் ஒரே நிமிஷத்திற்குள் செய்யவேண்டும்) வந்தவர் மாடியேறு முன்பு அப்பாவிடம் வந்தவரைப் பற்றி தகவல் சொல்லவேண்டும். பின்பு அவர் வந்ததும் அவர்கள் சம்பாஷணை செய்து கொண்டிருப்பார். அதைக் கவனித்து அதற்கிசைய நடக்க வேண்டும். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டுக் கீழே சென்றேன். வந்தவர் சென்னை ஆஸாமியென்று நடையுடை பாவனையிலிருந்து தெரிந்து கொண்டேன். அவர் என்னை வெறிக்கப் பார்த்தார். மாடிக்கு வந்ததும் அவர் தயங்கினார், திணறினார். சுற்று முற்றும் பார்த்து திறு திறுவென்று விழித்தார். எனக்குப் பெரிய சந்தேகமாய் விட்டது. பின்பு அது பயமாய் மாறிற்று. யாரையோ நன்றாய் விசாரியாமல் விட்டு விட்டோமே! தந்தை கோபிப்பாரே! என்ன செய்வது என்று, தந்தையார் மெதுவாக "என்ன ஸ்வாமி! எந்த ஊர் என்ன விசேஷமாய் வந்தீர்கள்?" என்று விசாரித்தார்.

அவர் சற்று தைரியமடைந்து, "இது பாரதியார் வீடுதானே" என்றார். தந்தை "ஏன் உங்களுக்கு சந்தேஹம்? இதுவேதான்" "இல்லை...பாரதியார் வெளியே சென்றிருக்கிறாரோ". "ஸ்வாமி! நான்தான் பாரதி" "விளையாடாதீர்! அவர் எங்கே சொல்லும்" "என்னையா இது! தர்மசங்கடம்! என்னைப் பாரதியில்லை என்கிறீரே! என்ன காரணம் கொண்டு அவ்வாறு கூறுகிறீர்?" "பாரதியார் எழுதிய கவிகளையும், கட்டுரைகளையும் வாசித்திருக்கிறேன். பாரதியாரைக் கிழவராக குறைந்தது ஐம்பது வயதாவது உடையவராக எதிர் பார்த்தேன். தாங்கள் முப்பது வயதுடைய யௌவன புருஷனாகத் தோன்றுகிறீர். தங்களைப்பார்த்தால் புல்லி பாதுஷால்தானோ என்று தோன்றுகிறது. "ஐயா தாம் என்னை கிழவராக மதித்தேனென்கிறீரே! என் கவிதை என்ன பழமை மிகுந்திருக்கிறதா? என்ன காரணம்? நண்பரே அங்ஙனமன்று. உங்கள் கவியில் அநுபவம் மிகுந்து விளங்குகிறது. இவ்வளவு அநுபவம் ஏற்பட குறைந்தது அறுபது வயதாவது ஆயிருக்க வேண்டும்." என்றார் அவர். பிறகு வெகு நேரம் பலவிதமாக சம்பாஷித்தனர். அவர் போகும் போது என் தந்தையின் பேச்சிலும், பாட்டிலும் மிகவும் ஈடுபட்டு விட்டதாகவும், இந்த மாதிரி வர புருஷர் உலகத்தில் அபூர்வமாக அவதாரம் செய்வார்களென்றும், மிகவும் புகழ்ந்து போற்றி விட்டுப் போனார்.

மேலே கூறிய நண்பர் பாதுஷா என்றதும் தந்தை தானே ஜிஹாங்கீர் என்று பாவித்து என் தாயாரிடத்தில் "மக்கே கோ ஜாயங்கே மன்னு காயங்கே ஹா—ஹாரே நூர்ஜஹான்—ஹாரே நூர்ஜஹான் என்று பாடினார். பாட்டின் மற்ற அடிகள் எனக்குத் தற்சமயம் ஞாபகமில்லை. ஆனால் அர்த்தம் மட்டும் ஞாபகம் இருக்கிறது. "அதாவது நான் டில்லிக்கு மட்டும் பாதுஷா. என் அல்லா எனக்கு மேல் பாதுஷாவாயிருந்து குடிகளை நன்கு பரிபாலிப்பதால் எனக்குப்பொறுப்பு மட்டு. அவன் மேல் பாரத்தைப் போட்டு விட்டு அமிருத பானம் செய்துகொண்டு மக்காவிற்குச்சென்று அல்லாவை தியானிப்பேன்" என் தாயாருக்கு ஹிந்தி தெரியாது. அர்த்தம் தெரிந்ததும் "நானு நூர்ஜஹான்" சரிதான் என்று சிரித்தார்.

பொங்கல் பாட்டு

(முன் பக்கத் தொடர்ச்சி)

லும் அது நாட்டு மக்களின் உள்ளத்திலே உள்ள மகிழ்ச்சியை உணர்த்துகிறது. அந்தப் பெண்கள் பாடி ஆடிக் கூடிக் குதிப்பதற்கு அந்தப் பாட்டு உதவியாக இருக்கிறது. பாட்டுக்கு ராகமென்ன? தாளம் என்ன? இலக்கணம் என்ன? என்ற கேள்விகளுக்கு அங்கே இடமில்லை.

தை பிறந்து விட்டதென்ற சந்தோஷந்தான் அந்தப் பாட்டுக்குச் சுருதி. 'தையும் பிறந்தது; தரையும் குளிர்ந்தது' என்று உள்ளங் குளிர அவர்கள் பாடுகிறார்கள். உலகமே குளிர்ந்து விட்டதாம். உணவு நிறைந்திருந்தால் உலகம் குளிர்வதற்கு என்ன சந்தேகம்? அதனால் தான் இந்த 'தை மாதப் பெண்களெல்லாம் தட்டும் கொட்டுமாகப் புறப்பட்டு விட்டார்கள். அவர்களுடைய தட்டும் கொட்டும் தை மாதப் பொங்கலிலே தொடங்கும் இன்ப வாழ்க்கையின் வசந்த கீதத்துக்கு தாளம் இசைக்கின்றன. அவர்களுடைய களி நடத்திலே நாட்டு வளம் விளங்குகிறது.

இன்று விளங்குகிறதா?
அது வேறு விஷயம்.
'தரை குளிர்ந்து' உண்மையான 'தையும் பிறந்தால்' அங்

அட்டைப் படம்

போதனவில் நடிக்கும் மாலதி.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்
151, லைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

"அம்மா, நான் செத்து விடுவேனென்று யார் சொன்னது ?"

அன்பே, கோபம் கொள்ளாதே—ஒன்றும் தெரியாத சிலபேர்கள் ஏதோ என்னமோ சொன்னார்களாம்.

ஜம்மியின்
லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல், குலைகட்டி முதலிய நோய்களை அபரிமிதமாய் குணப்படுத்தும். எல்லாவிடங்களிலும் விற்கப்படுகின்றன.

ஜம்மி வெங்கிடரமணய்யா அண்டு சன்ஸ்—மைலாபூர், மதராஸ்.
சப் ஆபீஸ்:—கும்பகோணம். (S.I.R.)
பிராஞ்சுகள்:—பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சினப்பள்ளி, பெங்களூர், விஜயநகரம்.

விசாலத்தின் விம்மல்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நீலாவுக்கு வயிற்றை எரிந்தது, விசாலத்தின் மேல் அவளுக்கிருந்த அசூயை அவள் நெஞ்சில் புகைந்து கொண்டேயிருந்தது. ஆனாலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மனதுக்குள் விசாலத்தைக் கரித்தாள்.

ஒரு வாரமாயிற்று. சாம்பசிவன் விசாலத்துக்கு அதிக சலுகை காட்டுவதைக் காணக் காண நீலாவின் பொருமைத் தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. இதன் காரணமாகச் சதா சண்டை.

அப்பாவும் சித்தியும் தனக்காக இப்படிச் சண்டை போடுவது விசாலத்துக்கு மனவேதனையை உண்டு பண்ணியது. "ஐயோ! எதுக்காக நான் இங்கு வந்தேன்" என்று கூட எண்ணமிடுவாள். அவளோ வயதுவந்த பெண். நினைவு தெரிந்த பின் இந்தச் சண்டையும் பூசலும் அவள் மனதைக் குழப்பின. அவளுக்கு என்ன செய்வதென்றே புரியாது. பூஜை அறையில் கிருஷ்ணர் படத்திற்கு முன்னால் போய், "ஸ்வாமி! பகவானே! சித்தியை நல்லவளாகப் பண்ணிவிடேன். அப்பாவை வெறுமனே வையருளே. சித்தியை சண்டை போடாமல் இருக்கப் பண்ண மாட்டேளா?..." என்று உள்ளம் உருகப் பிரார்த்திப்பாள்.

* * * *

நீலா சாந்தமாயிருந்த ஒரு சமயம் விசாலம் அவளிடம் போய் "சித்தி! எங்க ஸ்கூலிலே பூ போடச் சொல்லித் தந்திருக்கா. பாலுவுக்காக இந்தச் சொக்காயில் நான் ரோஜாப்பூ போட்டுண்டு வந்திருக்கேன், சித்தி. இன்னிக்கு அவனுக்கு அதைப் போட்டு விடறியா..." என்று சொல்லி ஒரு சட்டையைக் காட்டினாள்.

"போடீ வேலை மெனக்கட்டவளே! பூப்போடருளாம். பூ. உன் சட்டையை நீயே வச்சுக்கோ. அந்தச் சனியன் ஒன்னும் அவனுக்கு வேண்டாம்" என்று நீலா சீறினாள்.

விசாலத்துக்கு சித்தியின் வார்த்தைகள் கோபத்தை உண்டாக்கவில்லை. அதற்குப் பதிலாக அவளிடம் மேலும் தொடர்ந்து பேச தைர்யம் கொடுத்தன......அவள் சொன்னாள்: "இல்லை சித்தி இந்தச் சட்டையை பாலுவுக்குப்போட்டா அவன் அப்படியே கிருஷ்ணன் மாதிரி இருப்பான். ஏன்னுக்க முன்னே பார்த்த போது பாலு 'சோனியா' இருந்தான். இப்பொ நன்னு உடம்பு ஆகிவிட்டதோன்னு...... இந்தச் சட்டையைப் போட்டா இன்னும் நன்னயிருக்கும்னுதான் சொல்றேன் சித்தி!"

நீலாவின் கண்கள் அனல் போல் சிவந்தன.

"அடி, மூதேவிப் பிணமே! உன் முழியைப் பிடுங்கி அடுப்பில் வைக்க" என்று கத்திக் கொண்டே விசாலத்தின் விலாவில் காலால் பலமாக ஒரு உதை உதைத்தாள்.

விசாலத்திற்கு வலி பொறுக்க முடியவில்லை. குமுறிக்கொண்டு வந்த அழுகையை அடக்கிக் கொண்டு வாசல் பக்கம் போய் விட்டாள்.

பாலுவுக்கு கண் திருஷ்டி பட்டு விட்டதென்று நீலா சாம்பிராணி போட்டு திருஷ்டி கழித்தாள். சாம்பசிவன் வெளியிலிருந்து வந்ததும் அவனிடம் நீலா விஷயத்தைச் சொல்லி விசாலத்துக்கு பாலுவின் மேல் ஆத்திரம் என்றும் அவள் குழந்தையின் மேல் கண் திருஷ்டி வைத்து விட்டதாகவும் சொன்னாள்.

"அடி, அசடே! கண் திருஷ்டியாவது மண்ணுங்கட்டியாவது. குழந்தைகள் ஒன்னுக்கொன்று அப்படித்தான் இருக்கும்" என்று சாம்பசிவன் அலக்ஷியமாய்ச் சொல்லி விட்டான்.

ஆனால் நீலாவுக்கு மாத்திரம் சமாதானமே ஏற்படவில்லை. குழந்தைக்கு ஏதோ வந்துவிட்டதென்று நினைத்து அவதிப்பட்டாள். இப்பொழுது அவளுக்கு விசாலத்தைக் கொன்று விடலாமா என்று கூட தோன்றியது. இந்தப் பொருமையிலும் வெறுப்பிலும் சில தினங்கள் சென்றன.

* * * *

ஒரு சனிக்கிழமை; பிற்பகல் மூன்று மணியிருக்கும். நீலா கூடத்தில் ஒரு தமிழ் நாவலைப் படித்துக் கொண்டிருந்தாள். விசாலம் தோட்டத்தில் பூச்செடிகளுக்கு ஜலம் பாய்ச்சிக் கொண்டிருந்தாள். இந்த சமயத்தில் பாலு நீலாவின் கவனத்திலிருந்து நழுவி, மெல்ல பூனை போல் நடந்து வந்து அப்பாவின் 'ஆஸ்பத்திரி அறைக்'குப் போய் பூஞ்சையும், ரப்பர் குழாயையும் வைத்து விஷமம் செய்து கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அந்த விளையாட்டு அலுத்துப் போகவே, நாற்காலியின் மேல் ஏறி மருந்து அலமாரியைக் குடைய ஆரம்பித்தான்.

அடுத்த நிமிஷம் அவன் கையில் சிகப்புச் சீட்டு ஒட்டப்பட்ட ஒரு சிறிய சீசா இருந்தது. அதில் கல் கண்டு போன்ற சில மாத்திரைகள் இருந்தன. பாலு ஓசைப்படாமல் அந்த மாத்திரைகளில் இரண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். சீசாவை வைத்துவிட்டு மெதுவாக வாசல் தாழ்வாரத்துக்குப் போய் விட்டான்.

"பாலா! எங்கேயடா போனாய்?" என்று கேட்டுக் கொண்டே நீலா கொஞ்ச நேரத்தில் அங்கு வந்தாள். அங்கே பாலு ஒரு பெஞ்சியில் சோர்ந்து படுத்துக் கொண்டிருந்தான். நீலா அவனிடம் ஓடி, "அடே, என் தங்கமே" என்று சொல்லி அவனை வாத்ஸல்யத்தோடு அணைத்துக்கொண்டாள். ஆனால் பாலு பேசவில்லை. அவன் தலை தொங்கிவிட்டது. விழிகள் பிதுங்கி முகம் சோரமாகிவிட்டது. முகத்தில் நீலம் பாரித்துவிட்டது.

ஒருநொடியில் நீலாவின் குதூகலம் மறைந்தது. "ஐயையோ ஐயோ! உனக்கு என்னடா கண்ணே வந்துடுத்து" என்று அலறிக்கொண்டு குழந்தையுடன் உள்ளே ஓடினாள். வீடு கூட்டுகிறவளைக் கூப்பிட்டு ஆஸ்பத்திரியிலிருந்து அவசரமாக சாம்பசிவனை அழைத்துவரச் சொன்னாள்.

அவன் வருவதற்குள் பாலுவின் ஸ்வாசம் ஒடுங்க ஆரம்பித்துவிட்டது. நீலா பதைபதைத்துப் போனாள். "எனக்குத் தெரியுமே, அந்தக் குடிகேடி கண்பட்டால் அனர்த்தம் தான் என்று" எனக் கத்திக் கொண்டே கீழே விழுந்தாள்.

சாம்பசிவன் வந்தான்; குழந்தையைப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினான்.

"ஐயையோ! குழந்தைக்கு என்னன்று பார்த்துச் சொல்லுங்கோளேன். என் தங்கக் கட்டிக்கு மலையா வந்துடுத்தே......ஐயோ......ஈச்வரா! நான் என்ன பண்ணுவேன்........" என்று நீலா ராகம் போட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.

"என்னமோ விஷம் மாதிரியிருக்கே......ஏதாவது பாம்பு கிம்பு" என்று சாம்பசிவன் ஆரம்பித்தான். அவனுக்கும் அழுகை வந்து விட்டது.

பக்கத்திலிருந்த விசாலம் கலங்கிய கண்களை ஜன்னலருகில் போய் துடைத்துக் கொண்டாள்.

"நீங்க டாக்டர் பண்ணி என்ன பிரயோஜனம்......என் குழந்தைக்கு ஆயுஸ் கெட்டிப்படுத்த உங்களால் முடியல்லியே......" என்று நீலா கதறினாள். சாம்புவும் எவ்வளவோ உயர்ந்த மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தான்—தன்னிடமே நம்பிக்கையில்லாமல் அஸ்தமனம் ஆவதற்குள் குழந்தைக்குப் பிராணன் போய்விட்டது. 'கோ' வென்று அலறி மூர்ச்சித்து விழுந்தாள் நீலா. சாம்பு கல்லாய்ச் சமைந்து நின்றான். விசாலம் விம்மினாள்.

* * * *

ஒரு மாதம் கடந்துவிட்டது. நீலா கொடிய புத்திர சோகத்தால், உடல் குன்றி நடைபிணம் போலாகிவிட்டாள். சாம்புவுக்கும் மனப்புண் ஆறவில்லை.

இந்த சமயத்தில் திடீரென்று விசாலத்துக்கு உடம்புக்கு வந்துவிட்டது. முதலில் ஏதோ சாதாரண ஜுரம் என்று சாம்பசிவன் நினைத்தான். ஆனால் இரண்டு நாட்களில் அது வைசூரி என்று தெரிந்தது. சாம்பசிவனுக்குத் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டது போலிருந்தது.

* * *

நீலாவுக்கும் பழைய குணங்களும், அசூயையும் மறைந்து வந்தன. பாலுவை இழந்த பிறகு அவளுக்கு வாழ்க்கையே கசந்து விட்டது. தாயில்லாப் பெண்ணை மனம் நோகும்படி செய்ததற்குத் தகுந்த தண்டனை கிடைத்து விட்டதாக அவளுக்குத் தோன்றியது "ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற ஞானம் எனக்கில்லாமல் போய் விட்டதே" என்று அவள் எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டாள். இப்படி மனோவியாகூலப்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் விசாலத்துக்கு வைசூரி என்றதும் அவள் இடிந்து உட்கார்ந்து விட்டாள்.

தெய்வானுக்கிரகத்தால் விசாலம் பிழைத்துக்கொண்டாள். ஆனாலும் பூர்ணமாக சொஸ்தப்பட்டுவிடவில்லை... அவளுக்கு இரண்டு கண் பார்வையும் போய் விட்டது. தீபம் போல் ஆழ்ந்த சுடர் விட்டுக் கொண்டிருந்த விழிகள் இருந்த இடத்தில் தேவி வெள்ளைத் திரைகளை அளித்து விட்டுப் போய்விட்டாள். எப்படியாவது குழந்தை பிழைத்தெழுந்தால் போதும் என்றிருந்த சாம்பசிவன் இந்த விபரீத முடிவை எதிர் பார்க்கவேயில்லை. அவன் அப்படியே உளுத்த மூங்கில் மாதிரி வெலவெலத்துப் போய் விட்டான்.

* * * *

விசாலத்துக்கு உடம்பு குணமாகி தலைக்கு ஜலம் விட்ட தினம்; நீலா அவளை கையைப் பிடித்து, கிணற்றங்கரைக்கு அழைத்துக் கொண்டு வந்தாள். விசாலம் தன்னுடைய ஒளியிழந்த கண்களை உபயோகிக்கச் சக்தியில்லாமல் கைகளை முன்னால் நீட்டி தட்டித் தடவிக் கொண்டே வந்தாள். சாம்பசிவன் இந்தக் காக்ஷியைக் காணச் சகியாதவனாய் கண்களைப் பொத்திக் கொண்டான்.

ஸ்நானம் செய்யும்போது சித்தியின் கால்களைக் கட்டிக் கொண்டே விசாலம் சொன்னாள்: "சித்தி! எனக்குத்தான் கண் பார்வை போய்விட்டது. அந்தப் பாழும் கண்தான் பாலுவைக் கொன்றது என்று நீ சொல்லியிருக்கிறாயே. அப்படிப்பட்ட கண் இருப்பதைவிட போறதே நல்லது...இல்லையா... இனிமேல் என்னால் எந்தக் குழந்தை மேலேயும் திருஷ்டி வைக்க முடியாதோன்னு".

"ஐயோ! அப்படிச் சொல்லாதேடியம்மா. கண் என்ன செய்யும், மூக்கு என்ன செய்யும்? நமக்குப் பிராப்தம் அவ்வளவு தான். எப்படியாவது நீ ஆயுசோடு இருந்தால் அதுவே போதும்" என்று சொல்லி நீலா எல்லை கட்டமுடியாத வாஞ்சையோடு விசாலத்தைக் கட்டிக் கொண்டாள்.

பியான்ஸி பிரிண்ட் புடவை

நைஸான துணி. அழகிய கண்ணைக் கவரும் பிரிண்ட். உடலில் புட்டா அல்லது ஜங்களா போட்டது. படித்த மாணவிகள் இதைப் பெரிதும் விரும்புகிறார்கள். நவீன ரகம்.

12 முழம் புடவை 1க்கு ரூ. 9-0-0
16 முழம் ,, ,, ரூ. 12-0-0

முத்தையா ஸ்டோர்ஸ்,
மவுண்ட் ரோட்—மதராஸ்.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்கள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

கள்ள நோட்டுகள்

★

"கிச்சு"

கந்தன் கருகப்ப முதலியாரைக் கத்தியால் குத்திய பிறகு தான் அவன் மனம் "ஏண்டா அவரைக் கொன்றோம்" என்று பக்கு பக்கென்று அடித்துக் கொண்டது. அவரைக் கொன்றும் பிரயோஜனமில்லை. பதினாயிரம் ரூபாய்க்கு கரன்ஸி நோட்டுகள் கிடைத்தன. ஆனால் அவன் துரதிர்ஷ்டம் எல்லாம் கள்ள நோட்டுகள். கொலை செய்தோம் என்று என்றைக்காவது வெளியில் வருவது நிச்சயம். மேலும் போலீஸ் புலிகள் அவன்மேல் ரொம்பநாளாக ஒரு கண் வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆகையால் இவன்தான் கொலைசெய்திருக்கவேண்டும் என்று ஒரே நொடியில் முடிவுக்கு வந்துவிடுவார்கள். அப்படி அகப்பட்டுக் கொண்டால் தான் தூக்குமரத்தில் தொங்கவேண்டுமே என்ற எண்ணம் அவனை கதிகலங்கச் செய்தது. அவனுக்கு இருந்த ஆத்திரத்தில் தன்கையிலிருந்த கள்ள நோட்டுகளை அவர்மேல் வீசி யெறிந்தான்.

அவன் மூளை திடீரென்று வேலை செய்ய ஆரம்பித்தது. பேபரில் கள்ள நோட்டுகள் தயாரிப்பவர்களை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு கவர்ன்மெண்டில் இனாம் கொடுப்பதாக விளம்பரம் செய்திருந்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. தான் கொலை செய்ததற்காக தூக்குமரத்தில் தொங்க வேண்டாம், தான் செய்த காரியத்திற்காக ஐயாயிரம், பதினாயிரம் வெகுமானம் வாங்கி விடலாம் என்று அவனுக்குத் தோன்றியது.

திடீரென்று கதவைத்திறந்து கொண்டு ஒரு இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். "நல்லவேளையில் நீங்கள் வந்தீர்கள், ஸார்" என்றான் கந்தன். இன்ஸ்பெக்டருக்கு ஒன்றும் புரியவில்லை. கருகப்ப முதலியார் கீழே பிணமாய் கிடப்பதைப்பார்த்து திடுக்கிட்டார்,

உடனே டாக்டருக்கு போன் பண்ணினார்.

"யார் இவரைக் கொன்றது?" என்று ஆத்திரத்துடன் இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"அது தான் நான் சொல்ல வந்தேன். இவர் எனக்கு பதினாயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும். அதைக்கேட்டேன்." இந்தா எடுத்துக்கோ" என்று கரன்ஸிநோட்டுகள் கொடுத்தார். அதை வாங்கி பார்த்தால் எல்லாம் கள்ளநோட்டுகள். இந்த கள்ள நோட்டுகள் எனக்கு வேண்டாம். நீங்கள் கள்ள நோட்டுகள் தயாரிக்கிறீர்கள் என்று நான் போய் போலீஸில் சொல்லப்போகிறேன்" என்று கிளம்பினேன்.

உடனே அவர் கத்தியை எடுத்துக்கொண்டு என்னை ஓடி குத்த வந்துவிட்டார். நான் தற்காப்பிற்காக அவரை குத்த வேண்டியிருந்தது. நான் அவரை குத்தியிருக்காவிட்டால் என்னை கொன்றிருப்பார்" என்றான் கந்தன். இன்ஸ்பெக்டர் தொண்டையை கனைத்துக் கொண்டார். "நீ செய்ததுயம் ரொம்ப சரியான காரியம் தான். சிலபேர் நீ கொலை செய்தது தப்பு என்று சொல்லுவார்கள். ஆனால் யாரும் அச்சமயத்தில் வேறு என்ன செய்திருக்கமுடியும். இது மாதிரி கள்ள நோட்டுகள் தயாரிப்பவர்களை கண்டு பிடித்து கொடுப்பவர்களுக்கு கவர்ன்மெண்டில் பெரிய வெகுமானம் தருகிறார்கள் என்றார்.

"எவ்வளவு?" என்ற வார்த்தைகள் அவனை அறியாமலேயே அவன் வாயிலிருந்து வந்தன. அவனுக்கு தான் பூமியிலிருக்கிறோமா" அல்லது ஆகாயத்திலிருக்கிறோமா" என்று நிதானம் தெரியவில்லை. தன்னை கொலையாளி என்று இன்ஸ்பெக்டர் கருதவில்லை என்று ஆனந்தமடைந்தான்.

"ஐயாயிரமும் கொடுக்கிறார்கள்; பதினாயிரமும் கொடுக்கிறார்கள்.' தொகையெல்லாம் ஆசாமியைப் பொருத்திருக்கிறது. நீ ஒரு பெரிய கள்ள நோட்டு தயாரிப்பவனை கண்டு பிடித்துக் கொடுத்ததில் ரொம்ப சந்தோஷம். உன் சொந்த முயற்சியினால் உனக்குப் பெருத்த வெகுமானம் வருவதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்று அவன் கையைப் பிடித்து குலுக்கினார். கந்தன் திடுக்கிட்டான். இன்ஸ்பெக்டர் ஒரே நொடியில் அவனுடைய இரண்டு கைகளையும் அவன் எதிர் பாரா வண்ணம் பிடித்துக்கொண்டு கைகளில் விலங்கை மாட்டி விட்டார்.

"என்ன ஸார் இது! கை விலங்கை எடுக்கிறீர்களா இல்லையா? உங்களுடைய எண்ணம் என்ன என்று எனக்குத் தெரிந்து விட்டது. என்னையும் ஒரு கள்ள நோட்டு தயாரிப்பவன் என்று கோர்ட்டில் நிறுத்தி நீர் வெகுமானம் அடித்துக்கொண்டு போய் விடலாம் என்று பார்க்கிறுப்பலேயிருக்கு" என்றான் கந்தன் ஆத்திரத்துடன்.

"உனக்கு வெகுமானம் வேறு வேண்டுமா? நீ தூக்கு மரத்தில் தொங்காவிட்டால் போதாதா?"

"என்ன! தூக்கு மரமா? என்றான் கந்தன் திடுக்கிட்டு.

"நீ சரியான கதை கட்டினாயப்பா! முதலிலேயே உன் கைகளில் விலங்கை மாட்டியிருப்பேன். ஆனால் கருகப்ப முதலியாரைக்கொன்ற கத்தியால் என்னையும் குத்திவிடப்போகிறாயே! என்று இவ்வளவு தூரம் உன்னிடம் பேச்சு கொடுத்தேன். கருகப்ப முதலியாரை இரண்டு நாளைக்கு முந்தி தான் கள்ள நோட்டுகள் தயாரிப்பவர்களைக் கண்டு பிடிக்கும் ஸ்பெஷல் ஆபிசராக கவர்ன்மெண்டில் நியமித்திருக்கிறார்கள். நேற்றையதினம் கள்ள நோட்டுகள் தயாரிப்பவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட கள்ள நோட்டுகள் இவை தான்" என்றார்.

கந்தனின் தலை சுழன்றது. இப்போது அவன் காராக்ரஹத்தில் கடுந் தவம் புரிகிறான்!

டார்பிடோ பாடசாலைத் திறப்பு



சமீபத்தில் இந்திய கடற்படைக்காக ஜாம்நகரில் ஒரு 'டார்பிடோ' பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதை நவநகர் மகாராணி திறந்து வைத்தார். மகாராணி விழாவுக்கு வருகையில் எடுத்த படம்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

நரையை ஒழியுங்கள்.

தலைமயிர் நரைத்திருக்கும்பொழுது டாக்டர் அம்ருடைய கரை பிடிக்காததும் இயற்கையானதுமான தந்தக் கறுப்பு (IVORY BLACK) சிறந்தது. ரிஜிஸ்டர் நெ. 1998. எங்கும் விற்பனை செய்யப்படுகிறது.
APPAH & CO., Madras.
N. DASAI GOUNDER, Coimbatore.

ரூ. 10,000 மதிப்புள்ள கடியாரங்கள் இலவசம்

எமது உண்மையான மருந்து **"ஜோஹர்-இ-ஹசன்"** அனாவசியமான ரோமத்தை விலக்கிவிடும். அதன் உபயோகத்தால் ஆயுள் பூராவும் ரோமம் வளராது. சருமம் மிருதுவாகவும், அழகாகவும், பட்டுப் போன்றும் இருக்கும். விலை பாட்டில் ரூ. 1/15. மூன்று பாட்டில் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட், ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கைகடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும், அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும்.

குறிப்பு:—சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)
(EAB)

நீதிக் கதைகள்

யுத்தப் படைகள்

★

ஸ்ரீ எ. எஸ். பி. ஐயர், ஐ. ஸி. எஸ்.

மால்டா என்னுமிடத்தில் கப்பல் சிறிது நேரம் துறைமுகத்தில் தங்கிற்று. இங்கிலாந்து தேசத்தைச் சேர்ந்த யுத்தக் கப்பல்கள் அந்த துறைமுகத்தில் இருந்தன. அவைகள் சண்டையில் தலையிட்டுக் கொள்ளத் தயாராயிருப்பவை போல், காணப்பட்டன. துப்பாக்கிகள் பளபளவென்று துடைக்கப்பட்டிருந்தன. 'சப்மெரீன்' என்னும் ஆழி மூழ்கி ஒன்று கடற்பன்றியைப் போல், மூழ்குவதும் வெளியே வருவதுமாய், அங்கு மிங்கும் அதி வேகத்துடன் அலைந்து கொண்டிருந்தது. 'என்ன அழகான காக்ஷி' என்று மகன் தன் தந்தையைப் பார்த்துக் கூறினான்.

'ஆம். கொடிய விஷமுள்ள ஜந்துக்கள்போல் இவை பார்ப்பதற்கு மிக அழகாகத்தோன்றும். ஆனால் நாசம் செய்யத் தொடங்கினால் தான் இவைகளின் சுபாவம் தெரியும். யுத்தக் கப்பல், ஆழி மூழ்கி, நாக சர்ப்பம், புலி முதலியவைகள் பார்ப்பதற்கு அழகுள்ளவைகளாகவே தோன்றும். ஆனால் அவைகள் உண்டு பண்ணும் கெடுதியோ சொல்ல முடியாது' என்று பெரிய குப்பன் பதிலளித்தார்.

மாண்டிகார்லோ

மாண்டிகார்லோ என்னுமிடத்திலிருந்த உலகப் பிரசித்தி பெற்ற ஓட்டலுக்குள், தங்கள் அனுமதிச் சீட்டைக் காட்டி விட்டு, பெரிய குப்பனும் அவனுடைய மகனும் சென்றனர். ஓட்டலில் தங்களுக்குவேண்டிய வசதிகளைப் பெறுவதற்கு வேண்டிய சீட்டுகளையும் அவர்கள் வாங்கிக்கொண்டனர். எங்கு பார்த்தாலும் அலங்கரிக்கப்பட்ட பெரிய பெரிய கூடங்கள் அந்த ஓட்டலுக்குள் காணப்பட்டன. மேஜைகளும் நாற்காலிகளும் நிரம்பியிருந்தன. பலவகையான ஆட்டங்கள் ஆடுவதற்கு வேண்டிய வசதிகள் அங்கு ஏராளமாக இருந்தன. அந்த ஆட்டங்களை எப்படி ஆட வேண்டுமென்று ஒருவன் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். இந்தியாவில் பெரிய உத்தியோகத்திலிருந்த ஒரு உத்தியோகஸ்தனுடைய தாயார், வயது சென்றவள், எல்லா ஆட்டங்களையும் ஆடுவதில் கை தேர்ந்தவளாயிருந்தாள்: அவள் அவர்களை வரவேற்று அவர்கள் யோக க்ஷேமங்களை அன்புடன் விசாரித்தாள்: தந்தையும் மகனும் அந்த ஆட்டங்கள் ஆடும் போது நுட்பமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்களை அறிந்து கொண்டு, ஆடுவதில் கெட்டிக்காரர்களாகி விட்டனர். நாணயங்களை எப்போதும் கருப்புக் கட்டங்களிலும் வெள்ளைக் கட்டங்களிலும், சில குறித்த இடங்களிலும் வைத்துக் கொண்டேயிருந்தால் நஷ்டமில்லாமல் எவ்வளவு யுகங்கள் வேண்டுமானாலும் ஆடலாம் என்பதை அவர்கள் கண்டு கொண்டனர். தங்களுடைய சித்தாந்தப் பிரகாரம், மேஜையின் ஒரு மூலையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு அவர்கள் ஆடத் தொடங்கினர். இருபது 'பிராங்' நாணயங்களை அவர்கள் மேஜையின் மீது குறித்த இடத்தில் வைத்தனர். அவர்கள் அந்த மாதிரி சுமார் பதினைந்து நிமிஷங்கள் ஆடிக் கொண்டிருந்தனர். சூதாடிகளும், ஓட்டலில் தங்கியிருந்த மற்றவர்களும் அவ்விடத்தில் கூடி அவர்கள் ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சில சமயம் அவர்கள் ஆச்சரியமடைந்தனர்; சில சமயங்களில் அவர்கள் மனம் வருந்தினர். அவ்வாறு அவர்கள் ஆடிக் கொண்டிருக்கும் போது, அந்த கூடத்தின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் உத்தியோகஸ்தன் அவர்களைப் பார்த்து 'சீமான்களே! உண்மையாகவே பந்தயம் வைத்து ஆடுபவர்கள் காத்துக் கொண்டிருக்கின்றனர். தயவு செய்து அவர்கள் ஆடுவதற்குத் தாங்கள் இடம் கொடுக்க வேண்டும்' என்று சொன்னான். தந்தையும் மகனும் இடத்தை விட்டு எழுந்து சென்றனர். 'மற்றவர்கள் மாத்திரம் ஏன் நம்மைப் போல் எழுந்திராமல் உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்?' என்று பெரிய குப்பன் தன் மகனிடம் சொன்னார். 'அவர்கள் இந்த ஆட்டத்தை ஆட வேண்டுமென்னும் ஆசையினால் தூண்டப்பட்டவர்களாய் வந்திருக்கின்றனர். நம்மைப்போல் பொழுது போக்குக்காக ஏதோ ஆடி விட்டு, மற்றவர்களுடைய ஆட்டத்தைக் கெடுப்பதற்காக வந்தவர்களல்ல' என்று மகன் தந்தையிடம் சொன்னான். பெரிய குப்பன் ஆலோசித்துப் பார்த்துவிட்டு, 'நீ சொல்வது உண்மையாகவிருக்கலாம். ஆனால் நான் உயிருடனிருக்கும் வரையில், நீ சூதாட்டத்தில் தலையிட்டுக்கொள்ளாமலிருக்க வேண்டும்' என்று சொன்னார்.

பால் கொடுப்பது நிறுத்தப்பட்டது

லண்டன் நகரத்திலிருந்த ஒரு ஓட்டலில் குப்பனும் அவன் மகனும் தங்கினர். மப்புப் போட்டிருந்த ஆகாயம் பெரிய குப்பனுடைய மனதில் ஒருவிதமான அருவருப்பை யுண்டுபண்ணிற்று. ஓட்டல் தலைவி அவர்களுக்குக் கொடுத்து வந்த பழைய பால், அவருடைய மனதிலிருந்த உற்சாகத்தை அடியுடன் ஒழிந்து போகும்படி செய்து விட்டது. ஓட்டல் தலைவியின் மகள், பாலியப் பருவத்தினளான 'கிவன்' என்னும் பெண், பரிசுத்தமான பாத்திரத்தில் அந்தப் பாலைக் கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுப்பது வழக்கம். அழகிய பெண், ஒய்யாரமாக நடந்து வந்து கொடுத்த போதிலும், பால் என்னமோ பழைய பாலாய்த்தானிருந்தது. நாயின் வாலை நிமிர்த்த முடியுமா? அழகிய பெண் கொண்டு வந்தால் மட்டும் நல்ல பாலாகிவிடுமா? அதைக் குடித்த பிறகு அவர் அதிக அவஸ்தைப் படவேண்டியதாயிருந்தது. அந்தப் பாலை எப்படியாவது நிறுத்திவிட வேண்டுமென்று அவர் எண்ணினார். அவருக்கு ஒரே வழி தோன்றிற்று. ஒரு நாள் மூன்றாவது முறை பால் கொண்டு வரப்பட்டபோது, அவர் மணியை அடித்தார். 'கிவன்' என்னும் பெண் அவர் முன்பு தோன்றினாள். 'கிவன் என்னும் பெண்ணே, நீ கிராமத்தைச் சேர்ந்தவளா? அல்லது நகரத்தைச் சேர்ந்தவளா?' என்று பெரிய குப்பன் கேட்டார்.

'நான் வேல்ஸ் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவள்' என்று அவள் பதிலளித்தாள், நீ எப்பொழுதாவது பால் கறந்திருக்கிறாயா? என்று அவர் கேட்க, 'எவ்வளவோ முறை கறந்திருக்கிறேன். நான் பால் கறப்பதில் அதிகக்கெட்டிக்காரிஎன்றுபெயரெடுத்திருக்கிறேன்' என்று அவள் பதிலளித்தாள். 'நேற்றையதினத்துப்பாலை பசுக்கள் இன்று கொடுக்குமா?' என்று அவர் கேட்க, 'ஒருபோதும்பசுக்கள் அப்படி செய்வதற்கில்லை' என்று அவள் பதிலளித்தாள். 'அப்படியிருக்க மிருகங்களைவிட் மேலானவளாகிய, பகுத்தறிவுடன் கூடிய நீ ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?' என்று பெரிய குப்பன் கேட்டார். அந்தப்பெண் பழைய பாலைத் திருப்பிக் கொண்டு போய் அவர்களுக்கு அப்போது கறக்கப்பட்ட பாலைக் கொண்டு வந்து கொடுத்தாள். அது முதல் அவர்களுக்கு அப்போது கறந்த பாலையே கொடுத்து வந்தனர்.

'தந்தையே, நீங்கள் மிகவும் நல்ல காரியத்தைச் செய்து விட்டீர்கள்' இந்த ஓட்டலிலேயே பழைய பால் இல்லாமலிக்கும்படி நீங்கள் செய்து விட்டீர்கள்' என்று சிறிய குப்பன் தன் தகப்பனாரிடம் சொன்னார். 'நான் இன்னும் வேலையை முழுவதும் செய்யவில்லை. எவனோ ஒருவன் பழைய பாலை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறானென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் சகாயம் செய்ய வேண்டுமென்றால் நம்மால் முடியுமா?' என்று பெரியவர் சொன்னார் எப்படியிருந்தபோதிலும், இவ்விடத்தில் மொச்சைக்கொட்டை மாத்திரம் பச்சைப் பசேலென்று இருக்கிறதைப் போல் நம்தேசத்தில் காணமுடியாது' என்று மகன் உரைத்தான். 'இன்னும் காய்கறிகளுக்கு காயம் போடும் வழக்கத்தை நம்து தேசத்தவர்கள் இன்னும் தொடங்கவில்லை' என்று தகப்பனார் சொல்லி விட்டுச் சிரித்தார்.

இந்தியாவில் வாழ்க்கை

'கோடிக்கணக்கான கடும் புலிகளும், கொடிய சர்ப்பங்களும் இருக்கும் அந்த தேசத்தில் நீங்கள் எப்படி வாழ்ந்து வருகிறீர்கள்' என்று பெரிய குப்பனைப் பார்த்து, வயது சென்ற ஒரு ஆங்கில ஸ்திரீ கேட்டாள். 'அதேதேசத்தில் முன்னூற்று எழுபத்தி ஐந்து கோடி மனிதர்களும் வசித்து வருகிறார்கள் என்பதைத் தாங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்' என்று குப்பன் சொன்னார். 'என்ன! முன்னூற்று எழுபத்தி ஐந்து கோடி மக்களா? எவ்வளவு ஜனத்தொகை! ஆகையால், நூற்றுக்கணக்கான புலிகளையும், ஆயிரக்கணக்கான பாம்புகளையும் கண்டு நீங்கள் பயப்படவேண்டியதில்லை' என்று ஆங்கில மாது சொன்னாள். 'நாங்கள் அவைகளைக் கண்டு அதிக பயம் கொள்வதில்லை. அவைகளைத் தனியாகப் பார்க்கும் போதுதான் எங்களுக்குப் பயம் தோன்றும். எங்களுக்கு அதிகத் தொந்திரவு எலிகளினால் தான் ஏற்படுகிறது' என்று குப்பன் எடுத்துரைத்தார். 'சுமார் எவ்வளவு எலிகள் உங்கள் தேசத்தில் இருக்கும்?' என்று ஆங்கில மாது கேட்க, 'சுமார், ஆயிரக்கோடி எலிகள் இருக்கின்றன' என்று குப்பன் பதிலளித்தார். அவ்வளவு தானா! ஒரு மனிதனுக்கு சராசரி மூன்று எலிகள் வீதம் இருக்கிறதென்று வைத்துக்கொள்ளலாம். ஆகவே. நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து, ஒரு தினம் ஒரு மணி நேரம் எலிகளை ஒழிப்பதற்கென்று ஏற்படுத்திக் கொண்டால், ஒரு மாதத்திற்குள் எலிகளையெல்லாம் அடியுடன் கொன்று நிர்மூலமாகச் செய்துவிடலாமே?' என்று ஆங்கில மாது கூறினாள். 'அது வாஸ்தவம். ஆனால் ஜனங்களை ஒன்று சேர்ப்பதெப்படி? அந்த மாதிரியான ஒற்றுமை ஜனங்களுக்கிருந்திருக்கும் பக்ஷத்தில் பல கொடிய விஷயங்கள் இந்தியாவிலிருந்து மறைந்து போயிருக்கும். எலிகள் தொந்திரவைக் காட்டிலும் கஷ்டத்தை உண்டுபண்ணும் பல விஷயங்கள் இப்பொழுது இந்தியாவில் இருந்து வருகின்றன' என்று குப்பன் விவரித்துச் சொன்னார்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

ஜயது ஜயது ஸகல நிகமாகம குசல கின்னர கிம்புருஷ
ஸித்த வித்யாதர கீயமான, பஹு ஜகதுதய ரக்ஷண லய
ஹேதுபூத சதுரானன ஹரி ஹர ப்ரப்ருதி சிந்த்யமான
மணித்வீபே—ஜித ஸாது ஹ்ருத் தாபே |
ஸகல ஸுரமுனிநிகர பக்தஜன நிசய ஹ்ருதய காமித
ஸந்தான்
ஸௌபாக்ய தன கனக வாஹனாத்யஷ்டைச்வர்யதாயக
சிந்தாமணிமய
மஹா வைகுண்ட நகரே—நேத்ரானந்தகரே |
சண்ட மார்த்தாண்ட மண்டல விலஸித ஸப்தஹேம ப்ராகார
சோபாயமான பானுகோடி ஸமான வஜ்ரஸ்தம்பாயுத
ஸஹித
ஸுவர்ணமண்ட பாந்தரே—சுபதரே |
நவரத்ன கசித கனகமய ஹம்ஸ தூலிகா தல்பே—
சரத் சந்த்ர கோடி நிப சேஷதல்பே |
ஸுர நாயகாத்யஷ்டதிக்பால மகுட மணி கண
நீராஜித பதாரவிந்த: | ஜகதானந்த: |
உபய பார்ச்வோஜ்வலித கர்ண குண்டல
நிந்தித சந்த்ரமண்டல: | ஸேவித முனி மண்டல: |
பக்த த்ராண பராயண: | ஸ்ரீமன் நாராயண: |
லக்ஷ்மீ ரமணோ பகவான்.

II

ஸகல நிகம ஆகம குசல—ஸகல வேதங்களையும் ஆகமங்களையும் நன்குணர்ந்தவர்களான
கின்னர கிம்புருஷ ஸித்த வித்யாதர—தேவர்களான கின்னர, கிம்புருஷர்கள், ஸித்தர்கள், வித்யாதரர்கள் முதலானவர்களால் [ளால்
கீயமான—புகழப்பட்டதும்
பஹு ஜகதுதய—சிருஷ்டி (படைத்தல்)
ரக்ஷண—ஸ்திதி (உலகை ரக்ஷித்தல்)
லய—சம்ஹாரம் (ப்ரளய காலத்தில் உலகை சம்ஹரித்து தன்னுள் அடக்கிக் கொள்ளல்) ஆகிய முத்தொழில்களுக்கு
காரண பூதர்களாய் விளங்கும்
சதுரானன ஹரிஹர ப்ரப்ருதி—பிருமன், மஹாவிஷ்ணு, பரமசிவன் முதலானவர்களால்
சிந்த்யமான—தியானிக்கத் தகுந்ததாயுமுள்ளதும்
ஜிதஸாது ஹிருத்தாபே—சாதுக்களின் தாபத்ரயங்களை போக்கடிக்கும் மஹிமை கொண்டதுமான
மணித்வீபே—மணித்வீபம் என்று சொல்லப்படும் மகிமை பொருந்திய ஸ்தலத்தில்
ஸகலசுரமுனி நிகர—ஸகல தேவ ரிஷிகளாலும்
பக்த ஜன நிசய—பக்த கோடிகளாலும்
ஹ்ருதய காமித—விரும்பப்பட்ட
ஸந்தான ஸௌபாக்ய—புத்திர பாக்யம்
தனகனக வாஹன ஆதி—செல்வம், ஆபரணங்கள், வாஹனங்கள் முதலான
அஷ்டைச்வர்ய தாயக—சகலபோக பாக்கியங்களையும் அளிக்க வல்ல
சிந்தாமணி மய—"சிந்தாமணி" ரத்னங்களால் உண்டாக்கப்பட்டதும்
நேத்ர ஆனந்தகரே—கண்களுக்கு மிகுந்த ஆனந்தத்தை அளிக்கவல்லதுமான
மஹா வைகுண்ட நகரே—மஹிமை வாய்ந்த வைகுண்டத்தில்
சண்ட மார்த்தாண்ட மண்டல—சூரியமண்டலத்தில் விளங்கும்
விலசித—ஒளிக்கு சமானமாயுள்ள [கும்
ஸப்த ஹேம ப்ராகாரே—பொன் மயமான ப்ராகாரங்களுடனும் [னும்
சோபயமான—மிகுந்த சோபையுடன்
பானுகோடிஸமான—கோடி சூர்ய ப்ரகாசம் கொண்டு
சுபதரே—மங்களகரமாய் விளங்கும்
அயுதீ வஜ்ர ஸ்தம்ப ஸஹித—வஜ்ர மயமான அநேகம் தூண்கள் கொண்டு [கள் கொண்டு
ஸ்வர்ண மண்டபாந்தரே—ஸ்வர்ண மயமான ஆயிரக்கால் மண்டபத்தின் நடுவே யுள்ளதோர் அழகிய மண்டபத்தில் [மண்டபத்தின்
நவரத்ன கசித—நவரத்தினங்களால் இழைக்கப்பட்ட
கனகமய—தங்க மயமான
ஹம்ஸ தூளிகா தல்பே—ஹம்ஸ தூளிகா மஞ்சத்திலுள்ள
சரத் சந்த்ர கோடி நிப—அநேகம் சரத்கால சந்திரர்களுக்கு ஒப்பான வெண்மையுடன் குளிர்ச்சியையும், சந்தோஷத்தையும் அளிக்கவல்ல [தையும் அளிக்கவல்ல
சேஷ தல்பே—ஆதிசேஷனாகிய படுக்கையின்மேல்
ஸுர நாயக ஆதி—தேவேந்திரன் முதலான
அஷ்டதிக் பால—அஷ்ட திக் பாலர்களின்
மகுட மணி கண நீராஜித—க்ரீடங்களில் உள்ள நவரத்னங்களால் நீராஞ்சனம் செய்விக்கப்பட்ட [களால் நீராஞ்சனம் செய்விக்கப்பட்ட
பதார விந்த:—சரண கமலங்களையுடையவனும் (தேவர்களால் நமஸ்கரிக்கப்பட்டவனும்) [களால் நமஸ்கரிக்கப்பட்டவனும்)
ஜகதானந்த:—உலகிற்கு ஆனந்த ஸ்வரூபமாய் விளங்குபவனும் [னும்
உபய பார்ச்வ உஜ்வலித—இரண்டு பக்கங்களிலும் பிரகாசிக்கும் [கும்
கர்ண குண்டல—காதுகளில் அணிந்துள்ள குண்டலங்களால்
நிந்தித சந்த்ர மண்டல:—சந்திரனின் சோபையைப் பழிக்குமாறு விளங்குபவனும் [மாறு விளங்குபவனும்
ஸேவித முனி மண்டல:—முனி கணங்களால் போற்றித் தொழப்படுபவனும் [தொழப்படுபவனும்
பக்த த்ராண பராயண:—பக்தர்களை ரக்ஷிப்பதில் எப்போதும் தயாராயுள்ளபவனும் [தும் தயாராயுள்ளபவனும்
லக்ஷ்மீ ரமண: பகவான் ஸ்ரீமான் நாராயண:—லக்ஷ்மீபதியாயும், பரம் பொருளாயும் உள்ள ஸ்ரீமன் நாராயணன் விளங்குகிறார். [விளங்குகிறார்.
ஜயது ஜயது—அந்தப் பரம்பொருள் என ஹ்ருதய கமலத்தில் விளங்கி எனக்கு ஆனந்தத்தை உண்டாக்கட்டும். [விளங்கி எனக்கு ஆனந்தத்தை உண்டாக்கட்டும்.

III

இது நமது தென்னாட்டு சங்கீதத்தில் ப்ராசீனமாயுள்ள கத்யம் என்ற இசையில் ஸ்வாமிகளால் இயற்றப்பட்ட பிரபந்தமாகும். பொதுவாக பக்தி ரஸம் கலந்த ஸ்தோத்திரங்களையோ அல்லது பகவத் ஸ்வரூப அலங்காரம், வர்ணனை இவைகளையோ கத்யம், சூர்ணிகை, தண்டகம் முதலானவைகளால் பாடி உள்ளமுருகி ஆனந்திப்பது இயல்பு. இவைகளுக்குத் தாளம் கிடையாது. ஆரபி ராகத்தில் ராகச்சாயையை மாத்திரம் காட்டி சாஹித்தியத்திற்கு பிரதானம் அளித்து பாவத்துடன் பாடவேண்டியதாகும். இந்த கத்யத்தால் ஸ்வாமிகள், பகவான் ஆதிசேஷன் மேல் சயனித்து மஹா வைகுண்டத்தில் பக்தர்களுக்கு காட்சியளிக்கும் கோலத்தை நம் மனக் கண் முன் தத்ரூபமாக தோற்றமளிக்குமாறு வைகுண்டத்தின் வர்ணனைகளுடன் விவரித்து அப்பரமனை தியானித்து வழிபடுமாறு அருள்புரிந்துள்ளார்.

மணித்வீபே............—தேவீ பாகவதம் 12-வது ஸ்கந்தம், 10, 11, 12-வது அத்யாயங்களில் பராசக்தி மணித்வீபத்தில் வாசம் செய்வதாக விவரித்து அம்மணித்வீபத்தின் வர்ணனை விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆதி சங்கர பகவத் பாதாள் ஸௌந்தர்யலஹரி என்னும் தேவி ஸ்தோத்திரத்தில்,

ஸுதா சிந்தோர்மத்யே சுரவிடபி வாடீ பரிவ்ருதே
மணித்வீபே நீ போபவனவதி சிந்தாமணி க்ருஹே |
சிவாகாரே மஞ்சே பரமசிவ பர்யங்க நிலயாம்
பஜந்தி த்வாம் தன்யா: கதிசன சிதா நந்த லஹரீம் ||

என்று மணித்வீபத்தில் உள்ள சிந்தாமணி க்ருஹத்தில் தேவி வாசம் செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

நிற்குண ப்ருஹ்மத்தை குறிப்பிடுங்கால் அந்தந்த உபாஸகர்கள் தங்கள் உபாஸனா மூர்த்தியின் பெயராலேயே அழைப்பது வழக்கம். ஸ்வாமிகள் ஸ்ரீராமனையே நிற்குண பரப்ருஹமமாக உபாஸித்து வருகிறார் என்று அவர் கீர்த்தனைகளாலேயே நன்கு விளங்கும், ஆகையால் மேலே காணப்பட்ட மணித்வீப வர்ணனைகளை தான் உபாசித்து வரும் நிற்குணபர ப்ருஹ்மத்தின் வாசஸ்தனமாக குறிப்பிட்டுள்ளார்.

பஹு ஜகது தய:—'மும்மூர்த்திகளாலும் த்யானிக்கப்பட்ட' என்று ஸ்வாமிகள் குறிப்பிடுவதால் ஸகுண ப்ரும்மங்களான பிரும்மா, விஷ்ணு, ருத்திரர்களுக்கு மேற்பட்ட துரீயமான அல்லது நான்காவதான பொருள் நிற்குண பர ப்ரும்மம் என்ற ஸ்வாமிகளின் அபிப்பிராயம் இங்கு காண்கிறது. 'எந்துண்டி வெட்லிதிவோ,' 'மும்மூர்த்துலு குமி' முதலான கீர்த்தனங்களிலும் ஸ்வாமிகள் இவ்வுண்மையை நிரூபித்துள்ளார். இவ்வரிய தத்வம் மஹா நாராயணோப நிஷத்தில்,

வைகுண்டஸ்ய நாராயணஸ்ய ச, நித்யத்வ முக்தம்
ஸயேவ துரீய மித் யுக்த மேவ வைகுண்டஸ்ஸாகாரோ
நாராயணஸ் ஸாகா ரஸ்ச
துரீயந்து நிராகாரம்

என்றும் மாண்டுக்யோபநிஷத்திலும் ராமோத்தர தாபினி உபநிஷத்திலும் "சாந்தகும் சிவம் அத்வைதம் சதுர்த்தம் மன்யந்தே" என்றும் கூறப்பட்டுள்ளது கவனிக்கப்பட்டுள்ளது.

சிந்தாமணி மய:—தேவீ பாகவதத்தில் வர்ணிக்கப்பட்ட "சிந்தாமணி க்ரஹம்" என்பதை இங்கே ஸ்வாமிகள் சிந்தாமணி மயமாய் உள்ள வைகுண்டமாக வர்ணித்துள்ளார்.

IV

ராகம் ஆரபி

(29-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ் அவ. ஸ்நிதபமகரிஸ.)

கத்யம்-சூர்ணிகை, தண்டகம் முதலியவைகள் பாடப்பட வேண்டிய விதம் எல்லோரும் அறிந்த விஷயமாதலின் அதற்கு ஸ்வரக் குறிப்பு தேவையில்லை.

உங்கள் சாதாரண ஆவசியத்திற்குப் போதுமான. ஸோப்புகள் கையிருப்புள்ளன.

என், சிறந்த 501 வாஷிங் ஸோப்புகூட நீங்கள் உபயோகிக்கவேண்டித்தானே! எல்லோருடைய வழக்கமான ஆவசியத்திற்கும் போதிய அளவு சரக்குகள் கையிருப்புள்ளன. உண்மையில் ஒரு குறைவுபாடுமில்லை. இது நீங்கள் அறிந்திருத்தல் அவசியம். ஜாஸ்திப்படி வாங்கி சேகரம் செய்வதால் யாருக்கும் பிரயோஜனமில்லை. அப்படி சேகரம் செய்வோருக்கும் லாபமில்லை.

ஆனால்—என்ன பண்ணுவது?—அனேக வியாபாரிகள்-என் ஸோப்புகள் உபயோகிப்போர்கூட - நாட்டிலேனையோரும் விரும்பும் இந்த 501 ஸோப்புகள் எங்கே கிடையாமல் போய்விடுமோவென்று பயந்து தங்கள் வழக்கமான ஆவசியத்திற்கு எத்தனையோ மேற்கொண்டு வாங்கி வைத்திருக்கிறார்கள்! அது காரணந்தான் 501 ஸோப்புகளுக்கு எங்களால் சமாளிக்கக்கூட முடியாத அவ்வளவு அதிக கிராக்கி.

ஒவ்வொருவரும் தங்கள் சாதாரண ஆவசியத்திற்குப் போதுமான அளவு மட்டுமே வாங்குவதாயிருந்தால் 501 ஸோப்புகள் எச்சமயமும் எல்லோருக்கும் நியாயமான விலைக்கே வெகு ஒழுங்காக கிடைத்து வருவது நிச்சயம். சகலமான பெயர்களுக்கும் எங்கள் ஸோப்புகள் கிடைத்துவருமாறு நாங்களும் முயற்சிப்போம். எங்கள் விற்பனையாட்களும் ஊரூராய் ஒன்றுவிடாமற்சென்று சகல வியாபாரிகளிடமும்—

பெரியவர்களாயினும்சரி சிறியவர்களாயினும் சரி-விற்பனைக்குப் போதுமான அளவு சரக்குகள் இருக்கின்றனவா இல்லையாவென்று எப்பொழுதும் நன்கு கவனித்தும் வருவார்கள்.



தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்., டாடாபுரம் & பம்பாய்.

F S. 2861.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்,

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, லிங்கிசெட்டி நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு பிரபல டாக்டர்கள் ஜம்மி வெங்கட்டரமணய்யாவின் "லிவர்க்யூரை"யே சிபார்சு செய்கிறார்கள்

ஜம்மி'ஸ்
லிவர் க்யூர்
போலிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்,
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதறாஸ்.
மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

48, பெரிய தெரு, கும்பகோணம்.

பாக்கிஸ்தான்
விலை ரூ. 1-8-0

வீரத் துருக்கி	....	அணா 4.
தாஜ்மஹால்	....,	அணா 6.

வி. பி. வேறு.

ஷாஜஹான் புக் டெப்போ, நாச்சியார் கோவில்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

விக்டோரியா டிபோ.
மைலாப்பூர், மதராஸ்.

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்	I	2 0 0
இரண்டாம் பாகம் ரூ. 2.		மூன்றாம் பாகம் 2.

(மூன்று பாகங்களும் ஒரே தடவையில் வாங்கும் சந்தாதாருக்கு ரூ. 4.)

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை சென்னை.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி
வடிகா

காம சக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும்சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோட், மதராஸ்.

முதலில் கண்டு பிடித்தவர் யார்?

'டைப்ரைட்டர்'

★

நவீன முறையில் நடத்தப்படும் காரியாலயங்களில் டைப் அடிக்கும் மெஷின் இல்லாத இடம் ஏதாவதுண்டா? இப்போது சப்தமே இல்லாதபடி டைப் அடிக்கக்கூடிய மெஷின்களெல்லாம் வந்திருக்கின்றன. கைப்பெட்டி மாதிரி எங்கு வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டு போகக்கூடிய மாதிரி சிறிதாகக்கூட செய்து செய்து நமக்கு அனுப்புகிறார்கள். என்னென்ன கம்பெனியார் உற்பத்தி செய்த மெஷின்கள் என்பதெல்லாம் நமக்குத் தெரிகிறது. இந்த நவீன யந்திரத்தை முதன் முதலில் சிருஷ்டி செய்தவர் யார்? எப்பொழுது?

★

தையல் மெஷின்

★

"நாளை மாலை வந்துவிடுவேன். நிச்சயம நான் ஊருக்குப் போயாக வேண்டும். ஸால் ஜாப்பு சொல்லாதே. முதலில் 3 ஷர்ட்களாவது தைத்து 'ரெடி' யாகவை." என்று கண்டிப்பாக டெய்லருக்கு கட்டளை பிறப் பித்துவிடுகிறோம். இந்த அவசரத்துக்குக் கையால் தைத்து முடியுமா? 1 மணி நேரத்துக்குள் ஷர்ட்டுகளை 'பட, பட' வென்று அடித்துத் தள்ளுகிறதே தையல் மெஷின்! அதை முதலில் யார் கண்டு பிடித்தது என்று யோசனை பண்ணிப் பாருங்கள்? தெரியா விட்டால் பரவாயில்லை!

★

ஸப்மரீன்

★

'மத்தியதரைக் கடலில் நேற்று நமது சப்மரீன்கள் 7 எதிரிக கப்பல்களை மூழ்கடித்து விட்டன! ஆள் சேதமும், பொருள் சேதமும் ஏராளம்!' என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்திகளைப் படிக்கிறோம். ஸப்மரீன் எப்படியிருக்கும்? அது என்னமாக ஜலத்தினுள் மூழ்கியிருந்து துவம்ஸ வேலைகளில் முனைகின்றன? என்பதுபற்றி யெல்லாம் படித்து தெரிந்து கொள்கிறோம். படத்திலும் பார்க்கிறோம். இந்த நீர்மூழ்கிக் கப்பலை முதன் முதலில் கண்டு பிடித்தது யார்? எப்பொழுது?

★

டிராம்

★

நாளை விடுமுறையா? சரி ஒரு 4 அணா டிக்கெட்டு வாங்கிக் கொண்டு டிராம எங்கெங்கெல்லாம போகிறதோ அங்கெல்லாம் சுற்றிவிட வேண்டும்! காரியம் இருக்கிறதோ இல்லையோ! எப்படியாவது பொழுது போனால் சரி. என்று எண்ணிக் கொண்டு நம்மில் பலர் டிராம் வண்டியில ஆரோஹணமாகிறார்கள். இந்த 'டிராம்வே' எப்பொழுது போடப்பட்டது? எங்கு முதலில் போடப்பட்டது? யார் இதைக் கண்டுபிடித்தார்கள்?

★

டெலிபோன்

"ஹல்லோ! யாரது பேசுரது? ராமுவா? ஆகட்டும். சரியாக 6-15 மணிக்கு வந்து சேருகிறேன் பஜாருக்குப்போய்விட்டு கால் மணி 'லேட்' ஆனாலும் பிறகு ஸினிமாவுக்குப் போகலாம்" என்று சர்வ சுலபமாக 1 நிமிஷத்தில் டெலிபோனில் பேசி விடுகிறோம். ஆனால் இந்த சவுகர்யத்தைத் தேடிக் கொடுத்தவர் யார் என்பதை நாம் எப்பொழுதாவது நினைத்தது உண்டா? அந்த பிரமுகர் யார்? எந்த வருஷம் டெலிபோனைக் கண்டு பிடித்தார்?

அடுத்த வாரம் தெரிந்து விடும்!

சென்றவார நிகழ்ச்சிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பர்மாவில் ஜப்பானிய முஸ்தீப்பு

லண்டனில் இருக்கும் சீன விளம்பர இலாகா அதிகாரி டாக்டர் ஜார்ஜ் யே, "பர்மாவில் இப்போது ஆறு ஜப்பானிய டிவிஷன்கள், அதாவது சுமார் 1,20,000 யுத்த வீரர்கள் திரண்டிருக்கின்றனர். மடிக்கக்கூடிய ரப்பர் படகுகள் போன்ற நதிகளைக் கடக்கவல்ல சாதனங்கள் ஸால்வீன் நதியின்மேற்குப் புறத்தில் தயாராயிருக்கின்றனர். பர்மாவிலும் யுனான் பிரதேசத்திலும் முன்பு 300 ஜப்பானிய விமானங்கள் இருந்தன. இப்போது அவற்றின் தொகை மிகப் பெருகிவிட்டது" என்று தெரிவித்தார். இந்தோ-சீனாவில் உள்ள ரயில்வேக்கள் முதலியவற்றையும ஜப்பானியர் ராணுவ உபயோகத்திற்காக வசப்படுத்தியிருப்பதாகவும் அங்கு 1,00,000 பேர்களை ராணுவத்தில் சேர்த்திருப்பதாகவும் டாக்டர் யே வெளியிட்டார்.

* * * *

ஆசியா மக்களின் வாழ்வுபற்றி யு. எஸ். உதவி ஜனாதிபதி

யுத்தம் முடிந்தவுடன் இந்தியர் உட்பட ஆசியா மக்களுக்குரிய அந்தஸ்தைப்பற்றி அமெரிக்க உதவி ஜனாதிபதி ஹென்ரி வாலஸ் ஒரு பேட்டியில் பிரஸ்தாபித்தார். தங்கள் நன்மையை உத்தேசித்தும் ஆசிய மக்களின் க்ஷேமத்தை யுத்தேசித்தும் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த திட்டமிடுவதே அமெரிக்கரின் பிரதான நோக்கமாகும் என்று அவர் கூறினார்.

ஆனால் மிஸ்டர் வாலஸ் இந்திய ராஜீய நிலைமையைப்பற்றிச் சிறிது கூடப் பிரஸ்தாபிக்க சம்மதிக்கவில்லை; தங்களது வாழ்க்கை நிலை அபிவிருத்தியடையும் என்ற நம்பிக்கைக்கு இடமிருந்தாலொழிய ஆசியா மக்கள் அமெரிக்கருக்கு இந்த யுத்தத்தில் உதவமாட்டார்கள் என்றும், அவர்களது ஒத்தாசை மிகவும் அவசியமானது என்றும் அவர் சொன்னார்.

'ஆசியாவிலும் தென் அமெரிக்காவிலும் 100 கோடி மக்கள் இருக்கின்றனர்; அவர்களில் ஐந்தில் நான்கு பங்கினர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்றனர். ஒரு குடும்பத்தின் சராசரி வருமானம் பிரதி வருஷமும் 100 டாலர்களுக்கும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குக் கல்வி வசதி அதிகம் கிடையாது. ஆனால் அவர்கள் அதிக புத்தி கூர்மை வாய்ந்தவர்கள், அவர்களுக்குப் படிப்பு அதிகம் தேவை. நாகரிக சாதனங்களும் அவர்களுக்கு அவசியம். நமது மூலதனமும், உதவியும் அவர்களுக்கு வேண்டியிருக்கிறது. எல்லாவற்றிற்கும மேலாக அந்நியரின் தாக்குதலுக்கு ஆளாகாமல் இருப்பதையே அவர்கள் விரும்புகின்றனர். நாம் இதற்கு நியாயமான முறையில் உதவினால் நமக்குப் பல்லாண்டுகள் அமைதி இருப்பதுடன் நமது வியாபாரமும் பரஸ்பர நன்மையும் பெருகிவரும்."

"அமெரிக்காவிலிருப்பது போல் அந்நாடுகளின் கிராமாந்தரத்திற்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டால் அதிக லாபம் உண்டு. யுத்தம் முடிந்த பின் இந்தியாவுக்கும் மற்றும் ஆசியாவின் இதர பாகங்களுக்கும் இவ்விஷயத்தில் அமெரிக்கா அனுகூலம் புரியும்" என்றும் மிஸ்டர் வாலஸ் கூறிமுடித்தார்.

திருநெல்வேலி ஜில்லா, சிவசைலம் அத்திரி ஆசிரமத்தில் சமீபத்தில் திருப்பணியை முன்னிட்டு ஸர் பி. டி. ராஜனால் அஸ்திவாரக் கல் நாட்டி சுமார் ஆயிரம் ஜனங்களுக்கு அன்னதானம் அ[illegible]து.

நவயுகப் பிரசுரங்கள்

தமிழ்க் குமரி	1	12
திருச்சி ஜெயில் ..	1	12
பெண்	1	12
கிரஹதாகம் (பாகம் 1)	1	12
ஷை (பாகம் 2)	1	12
மின்சாரத்தின் விந்தை	1	12
மகாராஷ்டிர ஜீவன் உதயம்	1	12
தற்காலத்தமிழ் இலக்கியம்	1	8
இந்தியாவும் பொதுநல சமுதாயமும்	1	8
கட்ட பொம்மு	1	8
வின்ஸ்டன் சர்ச்சில்	1	8
பேஸிஸ்ட் ஜடாமுனி	1	8
ஆரம்ப அரசியல் நூல்	1	8
நடைச் சித்திரம்	1	8
மழையும் புயலும்	1	8
உலகம் பலவிதம்	1	4
ஸ்டாலின்	1	4
பாதுகா பட்டாபிஷேகம்	1	4
ஆங்கிலக் கவிதை மலர்கள்	1	0
ஷை பரிசுப் பதிப்பு	1	8
அருள் மொழிகள்	1	0
தமிழ் அறிஞர் முதலியார்	1	0
அற்புத உலகம்	1	0
உலகத்துச் சிறுகதைகள்	1	0
தேவதாஸ்	1	0
பாகிஸ்தான்	1	0
கோயரிங்	0	12
வெற்றி யாருக்கு?	0	12
சீதா கல்யாணம்	0	12
மாதவி	0	12
முப்பெருந் தலைவர்	0	10
சிந்தனையும் மின்னொளியும்	0	10

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

நீதிக் கதைகள்

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

சுக மரணம்

சுக மரணத்தைச் சட்டமாக்க வேண்டுமென்று கூட்டப் பட்ட ஒரு கூட்டத்திற்கு பெரிய குப்பன் போனார். 'மனிதர்களுக்கு தங்களுடைய விவகாரங்களில் பூரண சுதந்திரம் இருக்க வேண்டும். இவ்வுலகை விட்டு மரணமடையும் விஷயத்தில், அவர்கள் இஷ்டப்படி உயிரை விடக் கூடிய அபார சக்தி அவர்களுக்கு இருக்க வேண்டும். மற்றவர்கள் அந்த விஷயத்தில் தலையிடுவது இயற்கைக்கு விரோதமானது' என்று கூட்டத்திலிருந்த ஒருவன் சொன்னான். 'ஏன்? வேறு எவரையாவது கேட்டு விட்டுப் பிறகு தான் மனிதர்கள் பிறக்கிறார்களா என்ன? அதே மாதிரியாக அவர்கள் இவ்வுலகை விட்டுப் போகும் போதும் ஏன் வேறொருவரைக் கேட்க வேண்டும்' என்று குப்பன் கூறினார்.

மனிதர்களும் பூனையும்

கில்லார்னி என்னுமிடத்தில் குப்பன் தங்கியிருந்தான். அவனைச் சுற்றிலும் அநேகம் பையன்களும், சிறு பெண்களும் கூடி, 'கறுப்பு மனிதன்! கறுப்பு மனிதன்!!' என்று கூவிக்கொண்டிருந்தனர். தங்களை அடித்து விடப் போகிறாரே என்று பயந்து, அவர்கள் அவர் கைக்கு எட்டாத தூரத்திலேயே நின்று கொண்டிருந்தனர். குப்பன் அவர்களைத் தன்னருகில் வரும்படி அழைத்தார். அவர்களுக்குள் அதிக தைரியசாலியான ஒருவன் மாத்திரம் அவரருகில் சென்றான். மற்றவர்கள் தூரத்தில் நின்றுகொண்டு நடப்பவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தனர். 'நீ பூனைகளைப் பார்த்திருக்கிறாயா?' என்று குப்பன் அவனைக் கேட்டார். 'அநேகம் பூனைகளை நான் பார்த்திருக்கிறேன்' என்று பையன் பதிலளித்தான். 'அந்தப் பூனைகள் எல்லாம் ஒரே நிறமாக இருக்கின்றனவா?' என்று குப்பன் கேட்டார். 'அவைகள் எல்லா நிறங்களிலும் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். சிவப்பு, வெள்ளை, மஞ்சள், கறுப்பு, சாம்பல் நிறம் முதலிய பல வர்ணங்களையுடைய பூனைகளை நான் பார்த்திருக்கிறேன்' என்று பாட்ரிக் என்னும் பெயருடைய அந்தப் பையன் சொன்னான். 'அவைகளும் மனிதர்களைப் போல் பல நிறங்களையுடையனவாக இருக்கின்றன. வெள்ளைப் பூனைகள் கறுப்பு பூனைகளைவிட மேலானவைகளென்று நீ கருதுகிறாயா?' என்று குப்பன் கேட்டார். 'நான் அப்படி நினைக்கவில்லை. எனக்கு கறுப்பு பூனைகளைக் கண்டால் தான் பிரியம். கறுப்பு பூனைகள் அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருவதாகக் கருதப்படுகிறது' என்று அந்தப் பையன் சொன்னான். 'கறுப்புப் பூனையைக் கண்டால், நீ மெய்மறந்து "கறுப்புப் பூனை" என்று கூவிக்கொண்டு அதன்பின் ஓடுவாயா?' என்று குப்பன் கேட்டார். ஓடமாட்டேன், நான் கறுப்பு பூனையை அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பதால் அவ்வாறு செய்யமாட்டேன். ஆனால் கறுப்பு மனிதர்களைப் பார்ப்பது அரிதாகையால் நாங்கள் அவ்வாறு கூவினோம். நாங்கள் வேறு கெட்ட எண்ணங்களுடன் அவ்வாறு செய்யவில்லை என்று அந்தப் பையன் உரைத்தான். அப்படியானால் நாம் எல்லோரும் தேத்தண்ணீர் பருகலாம், என்று குப்பன் சொன்னவுடன், பத்து பனிரெண்டு பேர் அருகிலிருந்த தேத்தண்ணீர்க் கடையில் வட்டமாக உட்கார்ந்துகொண்டு தேத்தண்ணீர் பருகினர். டோரதி என்னும் ஆறு வயது நிரம்பிய சிறு குழந்தை குப்பனுடைய மடியின் மீது உட்கார்ந்து கொண்டு, அவருடைய முக வாய்க் கட்டையைத் தடவிக் கொண்டிருந்தது. அன்பினால் அக் குழந்தை அப்படிச் செய்வதாக குப்பன் நினைத்தார். ஆனால் பேட்ரிக் என்னும் பையன் அக் குழந்தையைப் பார்த்து 'டோரதி நீ அவ்வாறு செய்வதனால் ஒன்றும் பிரயோஜனமில்லை. பூனையின் கறுப்பு நிறம் எப்படி அதை விட்டுவராதோ, அதே மாதிரியாக அதுவும் வராது" என்று சொன்ன பிறகு தான், குப்பனுக்கு உண்மை விளங்கிற்று.

ஆத்மாக்கள்

"இந்துக்களாகிய நீங்கள் ஆத்ம சொரூபத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா?" என்று ஆங்கிலேய தேசத்தவன் ஒருவன் குப்பனைக் கேட்டான். 'எங்களுக்கு அந்த விஷயத்தில் அதிக நம்பிக்கையுண்டு. மனிதர்களுக்குள் மாத்திரம் ஆத்மாக்கள் இருக்கின்றன வென்பதில் மாத்திரமல்லாமல், எலிகள், கொசுக்கள், மூட்டைப் பூச்சிகள், பேன்கள் முதலியவையுள்பட பல மிருகங்களுக்குள்ளும் ஆத்மாக்கள் இருக்கின்றன வென்பதிலும் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். "என்ன அசட்டுத்தனமான நம்பிக்கை!" என்று ஆங்கிலேய தேசத்தவன் கூறினான். "நியாயப்படி, நான் கூறுவது சரி யென்பதை விளக்கிக் காட்டுகிறேன். உயிருள்ள வஸ்துகளுக்குள் எல்லாம் ஆத்மா இருந்தே தீர வேண்டும். மனிதர்களுக்குள் ஆத்மா இருந்தால், மிருகங்களுக்குள் இருப்பதற்கில்லை. ஜீவ வர்க்க நூலாசிரியர்கள் சொல்வதற்கில்லை" என்று குப்பன் எடுத்துரைத்தார். "மறு ஜனனத்தில் தங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?" என்று ஆங்கிலேய தேசத்தவன் கேட்டான். "ஆம். எனக்கு மறு ஜனனத்தில் நம்பிக்கை யிருக்கிறது. முன் ஜன்மத்தில் ஒருவன் செய்த கருமங்களை அனுசரித்து ஒரு மனிதனுக்கு மறு ஜனனம் ஏற்படும் என்பதில் நம்பிக்கையுண்டு. அரசாங்க அலுவல்களில் தந்திரத்துடன் நடந்து கொள்ளும் ஒருவன் நரியாகப் பிறக்கக் கூடும்; படைத்தலைவன் காளைமாடாகப் பிறக்கலாம்; மாமிச வியாபாரம் செய்பவன் கரடியாகத் தோன்றக்கூடும்; கொலையாளி புலியாகப் பிறக்கலாம்; கடன் கொடுக்கும் முதலாளி மூட்டைப்பூச்சியாகப் பிறக்கலாம். பையில் கை போட்டுத் திருடும் சில்லரைத் திருடன் கொசுவாகத் தோன்றலாம்? என்று குப்பன் பதிலளித்தார். 'இந்த மாதிரியான புது உருவங்களில் தோன்றக் கூடும் என்று நினைப்பதனால், உமது முன்னோர்களுக்கு ஏதாவது சகாயம் செய்ய முடியுமென்று நீர் நினைக்கின்றீரா?" என்று ஆங்கிலேய தேசத்தவன் கேட்டான். 'அதிய சகாயம் செய்ய முடியுமென்று நான் கருதவில்லை. ஆனால் இந்தக் கொள்கையில் நம்பிக்கையுள்ளவர்கள் மிருகங்களைக் கொல்ல மாட்டார்கள். தங்களுடைய பெற்றோர்கள் ஒரு வேளை கொல்லப்பட்டாலும் கொல்லப்படலாம் என்று அவர்கள் நினைக்கக் கூடும். இல்லையேல் ஒரு காலத்தில் அவைகள் தங்களைப் போல் மனிதர்களாக இருந்திருக்கக்கூடுமென்று நினைத்து ஜனங்கள் பூச்சிகளையும் மிருகங்களையும் ஹிம்சை செய்யாமல் விட்டு விட்டாலும் விடக் கூடும். தாங்கள் மூட்டைப் பூச்சியாகவோ, கொசுவாகவோ பிறக்க வேண்டி நேரிடப் போகிறதே யென்று பயந்து மிருகங்களை ஜனங்கள் கொடுமையுடன் நடத்தாமலிருப்பதற்கு இது சிறந்த மார்க்கமாக இருக்கிறது என்று குப்பன் எடுத்துக் கூறினார். நீர் கூறிய காரணம் மிகவும் மேலானதாகத் தோன்றுகிறது. தண்ணீருக்குள் ஆத்மா இருக்கின்றதா?" என்று ஆங்கிலேயன் கேட்டான். "அதில் நாங்கள் நம்பிக்கை வைப்பதில்லை ஆனால் ஜைன மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதில் நம்பிக்கையுண்டு" என்று குப்பன் பதிலளித்தார். "நீராவியந்திரங்கள், கடிகாரங்கள், துப்பாக்கிகள் முதலியவைகளைப்பற்றி தங்கள் அபிப்பிராயமென்னமோ?" என்று ஆங்கிலேய தேசத்தவன் கேட்டான். "ஆங்கிலேய தேசத்தவர்களுக்குள் சிலர் கடியாரங்களாகவும், நீராவி யந்திரங்களாகவும், துப்பாக்கிகளாகவும், அழகிய பூச்செடிகளாகவும் மறு பிறப்பில் தோன்றுவார்களென்னும் நம்பிக்கை இந்தியாவில் இருந்து வருகிறது" என்று குப்பன் பதிலளித்தார்.

வித்தியாசமும் மேன்மையும்

'இந்த தேசம் இந்து தேசத்தைப் போல் அழகிய தேசமல்ல' என்று குப்பன் தன் சிநேகிதனை ஒரு ஆங்கிலேய தேசத்தவனிடம் சொன்னான். இங்கிலாந்து முழுவதும் சுற்றிப் பார்த்த பிறகு, மேற் கூறிய அபிப்பிராயத்தை வெளியிடவே, 'ஏன்?' என்று அத்தேசத்து நண்பன் கேட்டான். குப்பன் பின் வருமாறு பதிலளித்தார். 'இந்த தேசத்தில் பெரிய காடுகளாவது, கொடிய [illegible] காணக் கிடைக்காது. 'நியூ ப்ரஸ்ட்' என்பது ஒரு தோப்பு. நாய்களும், பூனைகளும் எங்கள் தேசத்து புலிகளுக்கும் யானைகளுக்கும் சமானமாகமாட்டா. மலைகளும் ஆறுகளும் உங்கள் தேசத்தில் மிகச் சிறியவைகளாக இருக்கின்றன. மிகவும் குளிர்ந்த சீதோஷ்ண ஸ்திதியை உங்கள் நாடு பெற்றிருக்கிறது. பாஷையோ காதுக்கு இன்பமானதாக இல்லை. நடை உடை பாவனைகளோ எங்கு பார்த்தாலும் ஒரே மாதிரியாக இருக்கிறது. மேலும் பெரிய ஆலமரங்கள் போன்ற இலைகளுடன் கூடிய மரங்கள் இத் தேசத்தில் கிடையாது. இருக்கும் மரங்களும், இலைகளேயில்லாமல் ஆறுமாத காலம் மொட்டையாக இருக்கும்."

"என்னைப்போல ஒருபோதும் நீ சாமர்த்தியசாலியாக இருக்க முடியாது" என்று ஆங்கிலேய தேசத்து நண்பன் குப்பனிடம் சொன்னான் 'ஏன்?' என்று குப்பன் கேட்டான். 'நீயோ என்னை விடக் குள்ளமானவன்; கறுப்பு நிறம் பொருந்தியவன்; பருமனான சரீரத்தை யுடையவன், மேலும் உனது கண்களும், மயிரும் கறுப்பு நிறமுள்ளவையாக இருக்கின்றன. என்னுடைய கண்களோ நீலம் நிறம்பொருந்தியவைகளாக இருக்கின்றன. என்னுடைய மயிரோ செம்பட்டை மயிர். நான் நீண்ட கைகளையும், மூக்கையும் உடையவனாயிருக்கிறேன் என்று ஆங்கிலேய தேசத்தவன் சொன்னான். 'என்ன அசட்டுத்தனமாகப் பேசுகிறாய்? நீ கூறுவதெல்லாம் நமது தோற்றத்தைப் பொறுத்த வித்தியாசமாயிருக்கின்றனவே, தோற்றத்தில் மனிதனுக்கு மனிதன் வித்தியாசம் இருந்தேயாக வேண்டுமல்லவா. அதனால் ஒருவனை விட மற்றவன் மேலானவன் என்று எப்படிக் கூற முடியும்? அவைகள் மேன்மையை ஒரு போதும் குறிப்பிட முடியாது" என்று குப்பன் விவரித்துக் கூறினான். 'அதே மாதிரி தான் இந்தியாவுக்கும் இங்கிலாந்திற்கும் உள்ள வித்தியாசமும் என்று அறிந்துகொள்" என்று சுருக்கென்று மனதில் படும்படி, ஆங்கிலேய தேசத்தவன் பதிலளித்தான்.

சமயோசித புத்தியுள்ள சோதிடன்

★

ஸ்ரீ என். ராமனுதன்

இரத்தினகிரி என்பது ஒரு இராஜ்யம். அதை இரத்தின பூபதி என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரு மனைவியர் உண்டு. மூத்தவள் பெயர் சந்திரலேகை. இளையவள் பெயர் இந்திரா. இரண்டு மனைவிமார்கள் இருந்தும் புத்திர பாக்கியம் இல்லாதவனாய் இருந்தான். எவ்வளவோ தானம், தருமம், முதலானவற்றைச் செய்தான். ஆனால் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. கடைசியில் அவனுடைய குலகுருவாகிய விஸ்வவஸ் என்பவர் "புத்" என்னும் யாகத்தைச் செய்தால் புத்திர சந்தானம் உண்டாகும் என்று சொல்ல அவ்விதமே அந்த அரசனும் சரிவர அந்த யாகத்தைச் செய்தான்.

யாகத்தைச் செய்த சிறிது காலத்திற்குப் பிறகு இளைய மனைவியாகிய இந்திரா கர்ப்பவதியானாள். அரசனும் மிகுந்த சந்தோஷமடைந்தான். பிறகு சரியான காலத்தில் இந்திரா ஒரு ஆண் மகவைப் பெற்றாள். அரசன் தன் பிள்ளைக்குத் தயாபரன் என்ற பெயரைவைத்தான் ஐந்து வருஷங்கள் கழிந்தன. அரச குமாரனுக்கு வேண்டிய வில், வாள், வேல், குதிரை யேற்றம், யானை யேற்றம் முதலான வித்தைகளைப் போதிக்க ஓர் குருவை அரசன் நியமித்தான். வருடங்கள் பல சென்றன. தயாபரனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான்.

இவ்விதம் சுகமாக வாழ்ந்து வருகையில் தயாபரனுக்குத் திடீரென்று சுரம் கண்டது. இதைக் கேள்விப்பட்டு அநேகம் வைத்தியர்கள் அரண்மனைக்கு வந்து போயினர். ஆனால் தயாபரனுக்கு நோய் நின்றபாடில்லை. "சந்திரனைக் கண்ட சமுத்திரம்போல்" வியாதி மேன்மேலும் அதிகமாகப் பீடித்தது. அரசனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கடைசியில் தயாபரனுடைய ஜாதகத்தை ஓர் சோதிடரைக் கொண்டு பார்த்து ஜாதகத்தினுடைய பலாபலன்களைத் தெரிந்து கொள்ளலாம் என்று நாராயணசிங் என்னும் சோதிடரை வரவழைத்தான்.

அவன் நெடு நேரம் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்தான். முடிவில் அவன் ஒரு கல்லை எடுத்துக் கொடுத்துவிட்டுப் போனான். சிறிது நாள் சென்றது. தயாபரனுக்கு கடவுளின் கிருபையால் நோய் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்து சுகமாக நோய் நீங்கி எழுந்தான். உடனே இரத்தின பூபதியும் சோதிடரை வரவழைத்து வெகுமதி அளித்தார். ஆனால் தன் மகனுடைய ஜாதகத்தைப் பார்த்துவிட்டு ஒரு கல்லைக் கொடுத்துவிட்டுப் போனதின் கருத்தை அறிய இளைய இராணியாகிய இந்திரா ஆவல் கொண்டு சோதிடனைப் பார்த்து கல்லைக்கொடுத்துப்போனதின் காரணம் என்னவென்று கேட்டாள்.

சோதிடன், "தாயே! மகன் ஆயுள் கெட்டி என்று நான் ஒரு கல்லைக் கொடுத்து உங்களுக்கு உணர்த்தினேன்" என்றான். இதைக் கேட்டு அரசனும் இளைய இராணியும் அளவிலா ஆச்சரியம் அடைந்தார்கள். பிறகு அந்த சோதிடருடைய திறமையைக் கண்டு அவனுக்கு இன்னும் பல சிறந்த வெகுமதிகளை இளைய இராணியும் கொடுத்தாள்.

நாட்கள் சென்றன. "பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழியின்படி அரசனுக்கு கொடிய வியாதி கண்டது. அதனால் அவன் மிகுந்த கஷ்டப்பட்டான்: புழுப்போல் துடித்தான். அநேகம் இராஜவைத்தியர்கள் அரசனுக்கு வைத்தியம் செய்தார்கள். எவ்விதமான வைத்தியம் செய்த போதிலும் அரசனுக்கு வியாதி அவ்விதமே இருந்தது. அரசனது மனைவிமார்களும், தயாபரனும், மற்றுமுள்ள மந்திரிமார்களும் என்ன செய்வதென்று தெரியாது, பாலைவனத்தின் நடுவில் தண்ணீர் அகப்படாமல் தத்தளிப்பவன்போல் துன்பப்பட்டனர். அச்சமயத்தில் இளையராணி தன் மகனுக்கு ஜாதகம் பார்த்த சோதிடரை வரவழைத்தாள். சோதிடரும் அரசனுடைய ஜாதகத்தைப் பார்த்துவிட்டு முன்பு மாதிரியே ஒரு கல்லைக் கொடுத்துவிட்டுச் சென்றார். இராணியும் அந்தக் கல்லைப் பார்த்துவிட்டுத் தன் கணவன் சௌக்கியமாக நோய் விலகி எழுந்து விடுவான் என்று சந்தோஷம் அடைந்தாள்.

ஆனால் அதற்கு மாறாக சில நாளைக்கெல்லாம் அரசன் இறந்தான். இராஜ்யம் முழுவதும் துக்கக் கடலில் ஆழ்ந்தது. சோதிடர் இராணியைக் கண்டு துக்கம் விசாரிக்க வந்தான். அப்போது அவன், "அன்னாய்! என்ன செய்யலாம்? யாரை விதிவிட்டது? ஜாதகம் பார்த்தபொழுதே இவ்விதம் நேரும் என்று எனக்குத் தெரியும்; ஆயினும் அதை எனக்கு நாவால் உரைக்க மனம் வரவில்லை. தலைக்குக் கல் வந்தது என்பதை அறிவிக்கவே கல்லைக் கொடுத்துப் போயினேன்" என்றான்.

டோங்ரே
பாலாமிருதம்
பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.



உலகில்
சிறந்த
சரும ரோக
நிவாரணி

ஜாம்-பெக்
விஷத்தைப்
போக்கி
மாயமாய்க்
குணப்படுத்தும்.

ஜாம்-பெக் சிறந்த சரும ரோக நிவாரணி என புகழ்பெற்றது. வெட்டுக்காயம், சிராய்ப்பு, தீப்புண், ரணம், மற்றும் தேமல், புண், விஷப்புண் முதலியவற்றிற்கு ஜாம்-பெக்கைவிட சிறந்த நிவாரணி கிடைக்காது. எங்குமுள்ள டாக்டர்களும் நர்ஸுகளும் ஜாம்-பெக்கைச் சிபார்சு செய்து உபயோகிக்கின்றனர். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1. அல்லது 2—4. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது